www.padippakam.com

ஏப்ரல் 2003

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## உலக மேலாதிக்கப் போர்

படிப்பகம்



## உலக மேலாதிக்க போர் வெறியன் புஷ்சே ஈராக் மீது கை வைக்காதே!

## — புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்

உலகத்திலிருந்து பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாக அறிவித்து, உலகம் முழுவதும் தனது மேலாதிக்கத்தை நேரடியாக நிறுவத் துடிக்கிறது பயங்கரவாத அமெரிக்கா. அதன் ஒரு பகுதிதான் ஈராக் மீது தொடங்கியிருக்கும் ஆக்கிரமிப்பு போர் நடவடிக்கை. ஐக்கிய நாடுகள் சபையும், மற்ற உலக நாடுகளும் உலக ரவுடி அமெரிக்காவின் இந்த அத்து மீறலைக் கண்டிக்கவோ, ஆக்கிரமிப்பைத் தடுக்கவோ திராணியற்றுப் போயுள்ளன.

இந்நிலையில், போர் வெறியன் புஷ்சை எதிர்த்தும், ''ஈராக் மீது போர் தொடுக்காதே!'' என்று எச்சரித்தும், ''எண்ணெய்க்காக இரத்தமா?'' என்று போரின் உண்மையான நோக்கத்தை அம்பலப்படுத்தியும் உலகம் முழுவதும் இலட்சக் கணக்கான மக்கள் பங்கேற்கும் போர் எதிர்ப்பு பேரணிகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில், மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் ''உலக மேலாதிக்க வெறியன் புஷ்சே, ஈராக் மீது கை வைக்காதே!'' என்ற முழக்கத்தின் கீழ் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

★ **திருச்சியில்** மேல சிந்தாமணி அண்ணாசிலை முன்பு மார்ச்-17 ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு தோழர் இந்துமதி தலைமை தாங்கினார். ம.க.இ.க. தோழர் ம. இராமதாசு, பு.மா.இ.மு. தோழர் ஜி.ராஜா, ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்பு சங்கத் தோழர் வி.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உலக ரவுடி புஷ்சையும், அதன் கருவிகளான உ.வ.க., உலக வங்கி ஆகியவற்றின் ஆதிக்கத்தையும் அம்பலப்படுத்தி எழுப்பப்பட்ட முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.




★ **சென்னையில்** மார்ச் 17-ஆம் தேதி மெமோரியல் ஹால் எதிரில் ம.க.இ.க.வும், பு.ஜ.தொ.மு.வும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தின. ஆர்ப்பாட்டத்துக்கு தோழர் முகுந்தன் தலைமையேற்க, ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில், 1990-91-ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா ஈராக் மீது தொடுத்த போராலும், விதித்த பொருளாதார தடைகளாலும் பாதிக்கப்பட்டு குற்றுயிரும், குலையுயிருமாய் பிறந்த குழந்தைகளின் படங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தில் கடந்த 24-ஆம் தேதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் சீனிவாசன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் ஒரு அங்கமாக போர் வெறியன் புஷ் உருவ பொம்மையைப் பொதுமக்கள் நடுவே தூக்கிலிட்ட போது ஓடிவந்த போலீசு அதைத் தடுத்து நிறுத்தியது. ஆர்ப்பாட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் தொடங்கி பங்கேற்ற அனைவரும் போர்க் குணத்தோடு எழுப்பிய முழக்கங்கள் மக்களின் கவனத்தை ஈர்த்தது.

★ **பென்னாகரத்தில்** கடந்த 18ஆம் தேதி வட்டாட்சியர் அலுவலகம் எதிரே வி.வி.மு. நடத்திய ஆர்ப்பாட்டம் தோழர் வெங்கடேசன் தலைமையில் தோழர் அருண் சிறப்புரையுடன் நடைபெற்றது. ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் போர் தாக்குதலைக் கண்டித்தும், அதற்கு இணையாக விவசாயிகள் மீது பாசிச ஜெயா நடத்தும் பொருளாதாரத் தாக்குதலான இலவச மின்சாரத்தைக் கண்டித்தும், எல்லா தரப்பு மக்களையும் தாக்கும் மின்கட்டண உயர்வை எதிர்த்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்துக்கு முன் நடத்தப்பட்ட ஊர்வலம் மற்றும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு திரளான மக்கள் கூடிநின்று ஆதரவு தெரிவித்தனர்.

## மீனவர்களின் வாழ்வைப் பறிக்கும் உலக வங்கிக் கைக்கூலி ஜெயா அரசை முறியடிப்போம்!

## —— பு.ஜ.தொ.மு. அறைகூவல்

சென்னை மெரினா கடற்கரையோரம் பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் கடலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். பாசிச ஜெயா அரசு, மலேசிய நாட்டு நிறுவனத்திடம் போட்டுள்ள ஒரேயொரு ஒப்பந்தத்தின் மூலம் அத்தனை குடும்பங்களும் வாழ வழியின்றி அடித்து துரத்தப்படவுள்ளனர். எதற்காக இந்த ஒப்பந்தம்? உழைக்கும் மக்களை அப்புறப்படுத்திவிட்டு நட்சத்திர விடுதிகளும், பன்னாட்டு கம்பெனிகளின் அலுவலகங்களையும் நிறுவி மெரினாவை அழகுபடுத்தத்தானாம்!

இப்படி சொந்த ஊரிலேயே அகதிகளாக மாற்றப்பட இருப்பதை உணர்ந்த மீனவர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தொடங்கியதும் அவர்கள் வாழ்க்கைக்கு மாற்று ஏற்பாடு செய்வதாக கூறியது அரசு. கலங்கரை விளக்கத்திலிருந்து சீனிவாசபுரம் வரை வசிக்கும் 10,000 மீனவக் குடும்பங்களை, 1500 குடும்பங்கள் வசிக்கும் சீனிவாசபுரத்தில் கொண்டுபோய் ஆடு-மாடுகளைப் பட்டியில் அடைப்பது போல் அடைப்பதுதான் மாற்று ஏற்பாடாம்!

உலக வங்கியின் உத்தரவுபடி மீனவர்களின் வாழ்வைப் பறிக்கும் பாசிச ஜெயாவை அம்பலப்படுத்தி புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி கடந்த 19-ஆம் தேதி மாலை பட்டினப்பாக்கத்தில் தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. கூட்டத்திற்கு தோழர் முகுந்தன் தலைமை தாங்கினார். தோழர் லோகநாதன் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் இறுதியில் பு.ஜ.தொ.மு. கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த மீனவத் தொழிலாளர்களும், பெண்களும் இத்தெருமுனை கூட்டத்தைக் கேட்ட பிறகுதான் தங்களது பிரச்சனையின் உண்மையான பாதிப்பை உணர்ந்ததாகவும், இதை எதிர்த்து முறியடிக்கும் போராட்டங்களில் தாங்களும் பங்கெடுக்க முன்வருவதாகவும் தங்கள் மன எழுச்சியைப் பதிவு செய்தனர்.

**தகவல்:- பு.ஜ.தொ.மு.,**
**பட்டினப்பாக்கம், சென்னை.**

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

தொகுதி: 18

இதழ் 6

ஏப்ரல் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

# உலக வங்கிக் கைக்கூலி அரசின் மிகக் கொடிய தாக்குதல்

19 விவசாயிகளின் உயிரை விலையாகக் கொடுத்துப் பெற்ற 'இலவச' மின்சார சலுகையை அடியோடு ரத்து செய்து விட்டது, பாசிச ஜெயா அரசு. ஏழைக் குடிசை வாசிகள் பெற்று வந்த ஒரு விளக்கு மின்சார சலுகையும் பறிக்கப்பட்டுள்ளது. விவசாயம், வணிக நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், வீடுகள் உள்ளிட்டு அனைத்து தரப்பினர் மீதும் ரூ. 1400 கோடிக்கு மின்கட்டண உயர்வு திணிக்கப்பட்டுள்ளது. கடந்த 2001-இல் ரூ. 1200 கோடிக்கு மின்கட்டண உயர்வைத் திணித்தது போதாது என்று மீண்டும் ஒரு தாக்குதலை ஜெயா அரசு ஏவிவிட்டுள்ளது.

அதிரடியான இப்பெருந்தாக்குதல் மட்டுமின்றி, தமிழக பட்ஜெட்டில் மோட்டார் வாகன வரி, பெட்ரோல் - டீசல் மீது கூடுதல் வரி, வீட்டு மின் கட்டணத் தொகையின் மீது வரி, தொலைபேசி - செல்ஃபோன் வாடகைக் கட்டணங்கள் மீது வரி, கேபிள் டி.வி. ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு வரி, பள்ளி - கல்லூரி பேருந்துகள் மீது இதுவரை கண்டிராத சிறப்பு வரி, 15 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய வாகனங்கள் மீது மாசுக் கட்டுப்பாடு வரி என்று சகட்டு மேனிக்கு மக்கள் மீது வரிச் சுமை யேற்றியிருக்கிறது, ஜெயா அரசு. பற்றாக்குறையை ஈடுகட்டுவது என்ற பெயரில் மக்களுடைய கோவணத்தைப் பிடுங்காத குறையாகக் கொள்ளையடிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய வேலை வாய்ப்புக்கான வழிகள் இல்லாத நிலையில், வேலையின்மையை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகளைத் தனியாருக்கு விற்க ஜெயா அரசு முடிவு செய்துள்ளது. இதேபோல நட்டக்கணக்கு காட்டப்பட்டு 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் தனியாருக்கு விற்கத் தீர்மானித்துள்ளது. இவற்றில் பணியாற்றும் 14,000 ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப விருப்ப ஓய்வுத் திட்டமும் அறிவிக்கப்பட்டு விட்டது.

காலனிய ஆக்கிரமிப்பாளர்களையே விஞ்சுமளவுக்குக் கொடிய தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ள இப்பாசிசக் கும்பல், முந்தைய ஆட்சிகளை விட வரிச்சுமை குறைவுதான் என்றும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மின்கட்டணம் குறைவு என்றும் தனது அடாவடிக் கொள்ளைக்கு வெட்கமின்றி நியாயம் கற்பிக்கிறது. சிறு - குறு விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ 1000 முதல் ரூ. 1250 வரை அரசு மானியம் வழங்கவுள்ளதால், 'இலவச' மின்சாரம் ரத்து காரணமாக அவர்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது; ரூ. 250 வரை அவர்களுக்கு மிச்சமாகும் என்று கூசாமல் புளுகுகிறது'. இதேபோல குடிசைவாசிகளுக்கு ஒரு விளக்கு மின்சார வசதி தொடர அரசு ரூ. 100 மானியத் தொகை தருவதால், அவர்களுக்கு ரூ. 10 மிச்சமாகும் என்றும் அண்டப்புளுகை அவிழ்த்து விடுகிறது.

தமிழகத்தில் உள்ள 16 இலட்சத்து 51 ஆயிரம் விவசாய பம்பு செட்டுகளில் 10 இலட்சத்து 49 ஆயிரம் பம்பு செட்டுகள் சிறு - குறு விவசாயிகளுடையவை. இவர்களில் 3 முதல் 5 குதிரைச் சக்தி திறன் கொண்ட பம்பு செட்டுகளைப் பயன்படுத்துவோர் 5 சதவீதத்துக்கும் குறைவு. அவர்களுக்கு மட்டும்தான் அரசின் ரொக்க மானியம் கிடைக்கும். மீட்டர் பொருத்தப்பட்ட பின்னர், அரசு மானியம் கிடைத்தாலும் அதைவிட அதிகமாகவே மின்கட்டணம் இருக்கும் என்ற மிகச் சாதாரண உண்மையை மூடி மறைத்துவிட்டுச் சலுகை வழங்கிவிட்டதாக மாய்மாலம் செய்கிறது.

''மின்கட்டண உயர்வுக்கும் தமிழக அரசுக்கும் சம்பந்தமில்லை; இது மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முடிவு'' என்ற பாசிச ஜெயா கும்பலின் பொய்கள் அம்பலப்பட்டு போன பிறகு, ''ஆமாம்! உலக வங்கியின் கட்டளையால்தான் இலவச மின்சாரத்தைத் தொடர முடியவில்லை. மின்கட்டணத்தையும் உயர்த்த வேண்டியுள்ளது'' என்று சட்டப் பேரவையில் வெளிப்படையாகவே அறிவித்துள்ளார் கைக்கூலி ஜெயா. ''உலக வங்கியிடம் கடனுதவி பெறுவதைத் தவிர வேறு வழியிருந்தால் சொல்லுங்கள்'' என்று எதிர்க்கட்சியினரைப் பார்த்துத் திமிராகச் சவால் விடுகிறார்.

பொருளாதார சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் பிறதுறைகளில் ஆட்குறைப்பு செய்யும் ஜெயா அரசு, போலீசு துறைக்கு ஆளெடுப்பு, சலுகைகள் - செலவுகளை அதிகரித்துள்ளது. உழைக்கும் மக்களின் மிகச் சாதாரண எதிர்ப்பைக் கூட ஒடுக்குவதற்குத்தான் இந்த ஏற்பாடு. எனவே, வழக்கமான கண்டனங்கள், சட்டமன்ற வெளிநடப்புகள், அறப்போராட்டங்களால் பாசிச ஜெயா அரசின் இப்பயங்கரத் தாக்குதலை முறியடிக்க முடியாது. ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்து, புரட்சிகர அமைப்புகளில் திரண்டு மின் கட்டண உயர்வு, வரி விதிப்புகளை ஏற்க மறுத்து, எதிர்த்தாக்குதல் தொடுப்பதுதான் உலகவங்கிக் கைக்கூலி ஜெயா அரசைப் பின்வாங்கச் செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஈராக்:
# ஏகாதிபத்திய பயங்கரவாதிகளின் ஆக்கிரமிப்புப் போர்

இதுவரை உலக வரலாறு கண்டிராத, இரத்த வெறிபிடித்த, நாசகர - ஆக்கிரமிப்புப் போரை அமெரிக்காவும் - இங்கிலாந்தும் ஈராக் மீது நடத்திக் கொண்டிருக்கின்றன. உண்மையில் இது ஈராக்குக்கு, ஈராக் மக்களுக்கு, சதாம் உசைன் தலைமையிலான ஈராக் ஆட்சியாளர்களுக்கு எதிரான போர் மட்டுமல்ல; கோடானுகோடி உலக மக்கள் - உலக நாடுகளுக்கு எதிரான கொடிய உலக மேலாதிக்கப்போர்.

எல்லா பாசிச - பயங்கரவாதிகளையும் விஞ்சிவிடும் அளவுக்கு, புஷ்-பிளேர் சதிகார கும்பல் என்ன சொல்கிறதோ அதற்கு நேரெதிராகச் செயல்படுகிறது. இந்தப் போருக்கு ''ஈராக்கிய விடுதலை நடவடிக்கை'' என்று பெயரிட்டுள்ளார்கள். உண்மையில் ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பு, மறுகாலனியாக்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

''அதிபர் சதாம் உசைனின் ஈராக்கை நிராயுதபாணியாக்குவது'' ''மக்கள் திரள் பேரழிவு ஆயுதங்களை அழிப்பது'' தாம் தமது நோக்கம்; அதன் மூலம் வளைகுடா பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பு ஆபத்தை நீக்குவது தமது குறிக்கோள் என்று அறிவித்தனர். இதற்கு நேர்மாறாக அமெரிக்காவும் பிரிட்டனும் குவித்துவைத்திருக்கும் மக்கள் திரள் பேரழிவு ஆயுதங்களை ஈராக் மக்கள் மீது ஏவிச் சோதித்தறியும் வாய்ப்பாகவே இந்த ஆக்கிரமிப்புப் போரை நடத்துகின்றனர். இதன்மூலம் மக்கள் திரள் பேரழிவு ஆயுதங்களை உலக நாடுகள் பலவற்றுக்கும் விற்பதற்கான சந்தையை விரிவுபடுத்திக் கொள்கின்றனர்.

''சதாம் உசைனின் பாசிச கொடுங்கோலாட்சியை நீக்கிவிட்டு, ஒரு மாற்று ஜனநாயக ஆட்சியையும், ஈராக் மக்களுக்கு நல்வாழ்வையும் வழங்குவதுதான் போரின் நோக்கம்'' என்று பிரகடனப்படுத்தியுள்ளனர். ஆனால், பிற அரபு நாடுகளில் உள்ளதைப் போன்று ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்யும் உல்லாச - ஊதாரிகள் அடங்கிய ஒரு பொம்மை ஆட்சியை ஈராக்கில் நிறுவுவதுதான் போரின் உடனடி நோக்கம் என்பதை உலக மக்கள் அனைவரும் இப்போது புரிந்து கொண்டு விட்டார்கள்.

போர் தொடங்கிய ஒரு சில நாட்களிலேயே நூற்றுக்கணக்கில் ஈராக்கிய மக்கள் மட்டுமல்ல, அமெரிக்கா, பிரிட்டன் நாட்டு இராணுவத்தினரே செத்து மடிந்தனர். இது குறித்துத் துளியும் துயரப்படாத புஷ்-பிளேர் சதிகாரர்கள் தெற்கில் ஃபா தீபகற்பம் மற்றும் வடகிழக்கில் கிர்குக் எண்ணெய் வயல்களைத் தமது கூலிப்படைகள் ஆக்கிரமித்துக் கொண்டது குறித்துக் குதூகலித்ததை உலக மக்கள் மறக்கமுடியாது. ''தற்போது ஈராக்கின் எண்ணெய் வளங்கள் அந்நாட்டு மக்களின் எதிர்கால நலன்களுக்காக பாதுகாக்கப்பட்டுவிட்டன'' என்று புஷ்- பிளேர் சதிகாரர்கள் புளுகியதைக் கேட்டிருந்தால் இட்லரின் புளுகுணி மந்திரிகள் கோயாபல்சும் - கோயரிங்கும் அவர்களின் கல்லறைகள் குலுங்குமாறு சிரித்திருப்பார்கள்.

அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் மதிப்பீட்டின்படி, ஜப்பானின் ஹிரோஷிமா-நாகசாகியில் பேரழிவை ஏற்படுத்தி சரணடையச் செய்த ஒரு அணுகுண்டுக்கு சமமானவை 800 குரூயிஸ் ஏவுகணைகள். ஆனால், அதற்கும் மேலாக, அதாவது 1,000 குரூயிஸ் ஏவுகணைகள் பாக்தாத் மீது தினசரி வீசப்பட்டுள்ளன; தினமும் போர் விமானங்கள் 1,500 முறை பறந்து சென்று பல ஆயிரம் டன் குண்டுகளை பாக்தாத் மீது போட்டுள்ளன. ஏவுகணைகளை ஏவிவிடுவதும், போர் விமானங்கள் குண்டுகளை வீசுவதும் இன்னமும் அதிகரித்தவாறு தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எதிரி நாட்டு மக்களுக்கு ''அதிர்ச்சியும், பீதியும்'' ஏற்படுத்திச் சரணடையச் செய்வது என்ற பெயரில் அமெரிக்கா வகுத்துக் கொண்டுள்ள போர்தந்திரத் திட்டத்தை அமலாக்குவதுதான் இத்தகைய தொடர் குண்டுவீச்சு.

எதிரி நாட்டு மக்களுக்கு ''அதிர்ச்சியும் பீதியும்'' ஏற்படுத்தும் இந்தப் போர்த் தந்திரத் திட்டம், அதற்கான தயாரிப்பு 1996-லேயே உருவாக்கப்பட்டு விட்டது. 1991 ஈராக் போரில் பங்கேற்ற தளபதிகள்தாம் இதை வகுத்தவர்கள்.

முன்னெப்போதும் யாரும் கண்டிராத அளவு இது இருக்கும் என்றான் அமெரிக்க இராணுவ மந்திரி ரம்ஸ்ஃபெல்டு.

ஈராக் ஆக்கிரமிப்புப் போரில், சாதாரண சிவிலியன் மக்கள் அறிந்துள்ள வகையிலான அணுகுண்டுகள் இது வரை அமெரிக்காவால் வீசப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், ஆயிரக்கணக்கான பெரிய அணுகுண்டுகள் ஏற்படுத்தக்கூடிய நாசகார விளைவுகளை ஏற்படுத்தும் சிறிய சிறிய நுட்பமான, கதிர்வீச்சு அணுகுண்டுகள் பெரும் எண்ணிக்கையில் ஈராக் மக்கள் மீது அன்றாடம் வீசப்படுகின்றன.

இத்தகைய கோர-குரூரத் தாக்குதல்கள் இன்று நேற்றல்ல, கடந்த 12 ஆண்டுகளாகவே வெவ்வேறு அளவில் ஈராக் மீது நடந்து வருகின்றன. அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் ஏவிவிடும் துப்பாக்கித் தோட்டாக்கள், வெடிகுண்டுகள், ஏவுகணை முனைகள் எல்லாவற்றிலும் நுண்ணிய யுரேனியம் அணுசக்தி துகள்கள் திணிக்கப்பட்டுள்ளன. அவை பீரங்கி - கவச வாகனங்களைத் துளைத்துக் கொண்டுபோய் மனிதர்களோடு இரும்புக் கவச - வாகனங்களை எரித்து உருக்கிவிடக் கூடியவை. அவற்றின் அணுக் கதிர்வீச்சு 200 மைல்கள் வரை பரவி உயிர்க் கொல்லி நோய்களை விளைவிக்கிறது. மின்னணு லேசர் கதிர் சக்தியால் இயக்கப்படும் ''டோம்ஹாக்'' ஏவுகணைகள் காங்கிரீட் - எஃகு பதுங்கு குழிகளைத் துளைத்துக் கொண்டுபோய் வெடித்துப் பாதாள அறைகளில் பதுங்கிக் கொண்டிருக்கும் சிவிலியன்களையும் கொன்றொழிக்கக் கூடியவை. சிறுவெடிகுண்டுகள் அடங்கிய பொதிகள் - வெடிகுண்டு மூட்டைகள் வெடித்துச் சிதறி பூமிக்குக் கீழே கண்ணி வெடிகள்போல ஆயிரக்கணக்கில் புதைத்து வைக்கக் கூடியவை. இவை போரின்போது இராணுவத்தினரை மட்டுமல்ல, போருக்குப் பின்னும் பூமியில் புதைந்து கிடந்து சிவிலியன்களையும் ஏராளமாகக் கொல்லக் கூடியன.

1991-ஆம் ஆண்டு வளைகுடா போரில் அமெரிக்க வீசிய இத்தகைய நாசகார வெடிபொருட்களால் போருக்குப் பின் ஆயிரக்கணக்கான குவைத், ஈராக் மக்கள் மாண்டுபோயுள்ளனர். அணுக்கதிர் வீச்சால் குவைத்,



படிப்பகம்

www.padippakam.com



**ஐ.நா. விதித்த பொருளாதாரத் தடை - அமெரிக்காவின் முற்றுகைப் போரால், உணவும் மருந்தும் கிடைக்காமல் உயிருக்குப் போராடும் பல இலட்சக்கணக்கான ஈராக்கிய குழந்தைகளுள் ஒன்று.**

ஈராக் மக்கள் மட்டுமல்ல, போரை நடத்திய அமெரிக்கக் கூலிப்படையினரும் நாடு திரும்பிய பின் தீராத நோய்களுக்குப் பலியாகி உள்ளனர். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளில் 67 சதவீத குழந்தைகள் கொடிய பரம்பரை நோய்கள் பிடித்தவைகளாக பிறக்கின்றன. போரின் மறைமுகப் பாதிப்பே இந்த அளவு என்றால், நேரடித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள ஈராக் மக்களின் துயரம் குறித்துச் சொல்லத் தேவையில்லை.

1991 போரில் மட்டும் இரண்டு இலட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். 800 டன் அணுக்கதிர் வீச்சுக் கழிவுகளால் நீர், நிலம், காற்று நஞ்சாகி நோயினால் 10 முதல் 20 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். கடந்த 12 ஆண்டுகளில் அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகள் - தாக்குதல்களால், உணவு மற்றும் மருந்துப் பற்றாக்குறையினால் குறைந்தது 6 இலட்சம் குழந்தைகள் மாண்டுபோயினர்.

12 ஆண்டுகளாக நீடித்துவரும் இத்தகைய ஏகாதிபத்தியக் குரூர முற்றுகை - தாக்குதல்கள் இப்போது நேரடி ஆக்கிரமிப்புப் போராக வெடித்திருக்கின்றது. ''இவ்வளவு காலம் நீடித்த தாக்குதலால் ஈராக் பொருளாதாரம் நிலைகுலைந்து போயிருக்கிறது; ஐக்கிய நாடுகள் சபை மூலமாக மீண்டும் மீண்டும் நடத்தப்பட்ட ஆயுத சோதனை, ஆயுத அழிப்பு முற்றுகைத் தடைகள் காரணமாக அந்நாடே நிராயுதபாணி ஆகிவிட்டது; இந்நிலையில் ஈராக் சமுதாயமும் நிலைகுலைந்து, ஆட்சியாளர்கள் மீது முற்றாக வெறுப்புற்று இருக்கும்; ஒரு சில நாட்கள் மூர்க்கமான தொடர் தாக்குதல், ''அதிர்ச்சி மற்றும் பீதி'' தாக்குதல்கள் நடத்தினாலே ஈராக் இராணுவம் சரணடைந்துவிடும்; ஈராக்கை ஆக்கிரமிக்கும் அமெரிக்க - ஆங்கிலேய கூட்டுப்படையை இருகரம் கூப்பி வரவேற்பார்கள்'' என்று புஷ்-பிளேர் சதிகார கும்பல் கணக்குப் போட்டிருந்தது. ஆஃப்கானில் பெற்ற எளிதான வெற்றி, அதற்கு ஆதரவாக அமெரிக்க உட்பட பல நாட்டு அரசியல் அறிவற்ற மக்களின் ஆதரவு அந்தக் கும்பலின் நம்பிக்கைச் சின்னங்களாகப் பதிந்திருந்தன.

ஆனால், ஆக்கிரமிப்புப் போருக்கு முன்பாக ''ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இன்னமும் பதுக்கிவைக்கப்படிருக்கின்றன'' என்கிற புஷ்-பிளேர் சதிகாரக் கும்பலின் வாதத்தை உலக மக்களும் உலக நாடுகளும் அடியோடு நிராகரித்து, அவர்களைத் தனிமைப் படுத்திவிட்டனர். போர் தொடங்கியவுடன் அந்தக் கும்பல் பரப்பி வரும் வதந்திகள் மேலும் மேலும் அதை அம்பலப்படுத்தி வருகின்றன.

''ஈராக் துணைப்பிரதமர் நாட்டை விட்டு ஓடி எதிரிகளிடம் தஞ்சமடைந்துவிட்டார்; சதாம் படுகாயமடைந்துவிட்டார்; ஈராக் இராணுவத்தலைமை அழிக்கப்பட்டுவிட்டது; அதிபர் சதாமின் மகன் குண்டுவீச்சில் கொல்லப்பட்டார்; ஈராக்கின் ஒரே ஆழ்கடல் துறைமுகம் உம் கசார் பிடிபட்டுவிட்டது; பஸ்ரா நகர் வீழ்ந்துவிட்டது; ஈராக்கிய இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் சரணடைந்து வருகின்றனர்'' என்று அமெரிக்க - ஆங்கிலேய செய்தி நிறுவனங்கள், அவற்றின் எடுபிடிகள் மூலமாக உலகம் முழுவதும் பொய்ச் செய்திகள் - வதந்திகளை அவர்களின் உளவு நிறுவனங்கள் பரப்பின.

இவையெல்லாம் அண்டப்புளுகுகள் என்பது ஒரு சில நாட்களிலேயே நிரூபணமாகின. அதோடு, அமெரிக்க - ஆங்கிலேய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. கூட்டுப்படையினர் பலர் மாண்டனர்; அமெரிக்க இராணுவ வீரனே, அமெரிக்க அதிகாரிகளின் கூடாரங்கள் மீது கையெறி குண்டுவீசித் தாக்கினான்; சரணடைந்தவர்கள் திருப்பித் தாக்குகின்றனர்; உம்கசார், பஸ்ரா நகர மக்கள் கூட்டுப்படையை வரவேற்பதற்குப் பதில் ஆத்திரங் கொண்டு வெடிக்கின்றனர்; ஈராக் இராணுவத்தினரையும் சிவிலியன்களையும் பிரித்தறிய முடியவில்லை; கொரில்லா முறைத் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து முன்னேற முடியவில்லை என்கிற கசப்பான செய்திகளே புஷ்-பிளேர் சதிகாரக் கும்பலின் முகத்தில் அறைகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக பிடிபட்ட-பிணமான கூட்டு படை வீரர்கள் தொலைக்காட்சிகளில் காட்டப்படுகின்றனர்.

இதனாலும் ஈராக்கை தாம் எண்ணியவாறு எளிதில் கைப்பற்றிவிடமுடியாது என்கிற போர்முனை எதார்த்தத்தாலும் புஷ்-பிளேர் சதிகார கும்பல் ஆத்திரமுற்றிருக்கிறது. ஏற்கனவே போரிடும் 3 இலட்சம் படையினரோடு, மேலும் ஒன்றரை இலட்சம் பேரையும் கூடுதல் ஆயுதங்களையும் கொண்டு போய்க் குவிக்கும்படி உத்தரவிட்டுள்ளது. இனிவரும் நாட்களில் போர் இன்னும் கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மதம் பிடித்த மிருகத்தைப்போல ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் தாக்குதல்களை உக்கிரப் படுத்துவார்கள்.

ஆனால், தமது போர்வெறியால் புஷ்-பிளேர் ஏகாதிபத்திய பாசிச பயங்கரவாதிகள் மேலும் மேலும் உலக மக்களிடமிருந்து தனிமைப்படுகிறார்கள். கடந்த பிப்ரவரி 15-ஆம் தேதி உலகின் தென்கிழக்கில் உள்ள நியூஜிலாந்தின் ஆக்லாந்து முதல் வடமேற்கில் உள்ள கனடாவின் கியூபெக் - டொரான்டோ வரை, தென்மேற்கே பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ முதல் வடகிழக்கே டோக்கியோ வரை உலகின் குறுக்கும் நெடுக்கும் கோடானுகோடி மக்கள் ஈராக் போருக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இளஞ்சிறுவர்கள் முதல் முதியோர் வரை ஆண்களும் பெண்களும் பல்வேறு பிரிவு மக்களும் உலக வீதிகளில் கொந்தளித்துக் குமுறினர். போர் வெடித்தபின் இத்தகைய போர் எதிர்ப்புப் போராட்டங்கள் மேலும் கூடுதலாகி இருக்கின்றன. உலகமே முன்னெப்போதும் கண்டிராத வகையில், அந்தந்த நாட்டு போலீசுப் படையுடன் உலக மக்கள் சண்டையிடுகின்றனர். ஈராக்கிலிருந்து சவப்பெட்




மேலாதிக்கப் போரை எதிர்த்து இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் நடந்த ஆர்ப்பாட்டம்.

டிகள் மேலும் மேலும் அமெரிக்க - இங்கிலாந்து விமான நிலையங்களில் வந்திறங்கும்போது அத்தகைய போராட்டங்கள் அடக்க முடியாத அளவு பெரும் எண்ணிக்கையில் அமெரிக்கா - இங்கிலாந்தில் வெடிக்கும்.

உலக நாடுகள் - உலக மக்களின் இத்தகைய கடும் எதிர்ப்பையும் மீறி உலக சாவு வியாபாரிகளான ஏகாதிபத்திய பயங்கரவாதிகள் இந்த ஆக்கிரமிப்புப் போரில் இன்னமும் அழுந்தி நிற்பது ஏன் என்பது இப்போது உலக மக்களுக்கு நன்றாகவே புரிந்துவிட்டது. உலகின் மொத்த பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தியில் 61 சதவீத அளவு அமெரிக்க பயன்படுத்துகிறது. ஈராக், எண்ணெய் வளத்தில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கும் நாடு. பிற எண்ணெய் வளமிகு அரபு நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்திய எடுபிடிகளாகிவிட்ட நிலையில், ஆஃப்கான் போரின் மூலம் மத்திய ஆசியா எண்ணெய் வள நாடுகளையும் தம் ஆதிக்கத்தில் கொண்டு வந்துவிட்ட நிலையில், ஈராக்கின் எண்ணெய் வளத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதன் மூலம் பெட்ரோலிய எரிசக்தித்துறையில் அமெரிக்கா உலக ஏகபோகத்தை நிறுவி விட முடியும். இதோடு, ''யூரோ'' நாணயத்திற்கு எதிராக வீழ்ச்சியடைந்துவரும் அமெரிக்க டாலர் மதிப்புக்கு முட்டுக் கொடுப்பதற்காகவும் அமெரிக்கா வெறித்தனமாக செயல்படுகிறது. குறிப்பாக எண்ணெய் வளநாடான வெனிசுலாவின் பெட்ரோலிய வர்த்தகம் யூரோவுக்கு மாறினால் ஒரே நாளில் டாலரின் மதிப்பு 30% வீழ்ச்சியுறும். இதைத் தடுப்பதும் ஈராக் ஆக்கிரமிப்புப் போரின் உடனடி- நேரடி நோக்கம்.

என்றாலும், அமெரிக்க - ஆங்கிலேய பயங்கரவாதிகளுக்கு வேறு நோக்கங்கள் இல்லாமல் இல்லை. ஈராக்கை வென்று அடிமைப்படுத்துவதன் மூலம் தொடர்ந்து வடகொரியா, ஈரான், லிபியா என்று தனது உலக மேலாதிக்கத்துக்கு அடிபணியாத நாடுகள் மீது ஏதாவது ஒரு பழி சுமத்தி அவற்றின் மீதும் ஆக்கிரமிப்பு - அடாவடிப்போர் நடத்தவும் திட்டமிட்டுள்ளது. அத்திட்டத்திற்கு வசதியாக, இனி ஐ.நா.சபை ஒப்புதல் இல்லாமல், உலக நாடுகள் எவை எதிர்த்தபோதும், எந்த ஒரு சுதந்திர நாட்டின் மீதும் படையெடுக்கவும் ஆக்கிரமிக்கவும் தனக்கு உரிமையும் அதிகாரமும் வலிமையும் உண்டு என்று நிலைநாட்டவும் திட்டமிட்டுள்ளது.

உலகம் முழுவதும் பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தி மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள பன்னாட்டு எண்ணெய்க் கம்பெனிகள்தாம் இந்த ஈராக் ஆக்கிரமிப்புப் போரால் நேரடி ஆதாயம் அடையக் கூடியவை. ஆனால், இவை மட்டுமின்றி, பன்னாட்டு மருந்து உற்பத்தி ஏகபோக நிறுவனங்களும் இந்தப் போரை வரவேற்று ஆதாயம் அடைகின்றன. இதை உலகம் முழுவதும் உள்ள பிரபல பத்திரிக்கைகளில் முழுப்பக்க விளம்பரமாகக் கொடுத்திருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ வல்லுநரும் ஆராய்ச்சியாளருமான மாத்தியாஸ்ரத். இவைகளைப் போலவே இந்தப் போரால் பன்னாட்டு ஆயுத-தளவாட உற்பத்தி ஏகபோக நிறுவனங்களும் ஆதாயம் அடைகின்றன.

அமெரிக்காவின் முன்னாள் - இந்நாள் அதிபர்கள், துணை அதிபர்கள், இராணுவம் - போலீசு - மற்றும் நிதி அமைச்சர்கள் உட்பட முக்கிய பாசிச பயங்கரவாதிகள் அனைவரும் பெட்ரோலிய எண்ணெய், ஆயுதங்கள், மருந்து, செய்தி ஊடகம், மற்றும் சேவைத் துறை சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பு வகிப்பவர்கள், பங்குகளின் உடைமையாளர்கள். இத்தகைய பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் தங்குதடையற்ற சுரண்டலுக்கு நிலம், நீர், வானம் என்று உலகு தழுவிய மேலாதிக்கம் அவசியமாக உள்ளது.

இதை உலக ரீதியில் அரசியல், இராணுவம், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஏகபோக வல்லமை மிக்க அமெரிக்காவின் ஒற்றைத் துருவ மேலாதிக்கத்தின் மூலம் தான் நிறுவமுடியும் என்று அமெரிக்க - ஆங்கிலேய பயங்கரவாதிகள் நம்புகின்றனர். இத்தகைய, உலக மக்கள், உலக நாடுகள் அனைத்துக்கும் எதிரான ஒரு பயங்கரவாத சதித் திட்டத்தின் ஒரு பகுதிதான் இந்த ஈராக் ஆக்கிரமிப்புப் போர் என்பதை அதிகரித்த அளவில் உலக மக்கள் புரிந்து கொண்டு வருகின்றனர். தமது இராணுவ வல்லமை கொண்டு இப்போதைய ஆக்கிரமிப்புப் போரில் ஒருவேளை ஈராக்கை அமெரிக்க - ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் வென்று விடலாம்; ஆனால், இனிவரும் காலத்தில் இத்தகைய மேலாதிக்க முயற்சியை உலக மக்கள் நிச்சயம் முறியடிப்பார்கள்.

இதைச் சாதிக்க வேண்டுமானால் உலகின் பெரு நகரங்களில் ஆர்ப்பாட்டம், பேரணி, மறியல், கொடும்பாவி எரிப்பு போன்ற அமைதிவழி போராட்டங்கள் மட்டும் போதாது. ஏகாதிபத்தியங்களின் தூதரகங்கள், உலக வங்கி - உலக வர்த்தக நிறுவனங்கள் - சர்வதேச நிதிநிறுவனம் போன்றவற்றின் அலுவலகங்கள் தாக்கி சூறையாடப்பட வேண்டும். ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழிற்கழகங்களின் ஆலைகள் - அலுவலகங்கள் தாக்கித் தகர்க்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் உலகின் எந்த பாகத்திலும் நடமாட முடியாதவாறு கொன்றொழிக்கப்பட வேண்டும். உலகின் பல மூலைகளில் இருந்தும் அவர்களின் சவப்பெட்டிகள் ஏகாதிபத்திய விமான நிலையங்களில் போய் இறங்கவேண்டும். இனி நிம்மதியான உறக்கமோ, வாழ்வோ கிடையாது என்று ஏகாதிபத்தியவாதிகளுக்கு ''அதிர்ச்சியும் பீதியும்'' அவர்கள் அழியும் வரை நிரந்தரமாக வேண்டும்.

❑ ஆர்.கே.

www.padippakam.com

# ''தடா''வை விஞ்சும் ''பொடா''

மயந்திகுமாரி - ஜார்கந்து மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினச் சிறுமி. ஏழாம் வகுப்பு படித்து வந்த அச்சிறுமி ஒரு பயங்கரவாதியாம்! நக்சல்பாரி அமைப்பான மாவோயிஸ்டு கம்யூனிஸ்டு மையத்தின் (MCC) ஊக்கமான செயல்வீரர் என்று கூறி பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் அச்சிறுமியைக் கைது செய்து சிறையிலடைத்து வதைத்து வருகிறது, ஜார்கந்து அரசு. நக்சல்பாரி இயக்கத்தின் புரட்சிகரப் பாடல்களைப் பாடிவந்த அச்சிறுமி, போலீசு நிலையத்தில் விசாரணை என்ற பெயரில் வதைக்கப்பட்ட போதிலும், அடக்குமுறைக்கு அஞ்சாமல், ''ஜார்கந்து பெண்களாகிய நாங்கள் மலர்கள் அல்ல; சுட்டெரிக்கும் நெருப்பு!'' என்ற பாடலை முழங்கியுள்ளார்.

மயந்திகுமாரி மட்டுமல்ல; அவரைப் போல 60-க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கடந்த 6 மாத காலத்தில் பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் ஜார்கந்து மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜானிகிபுய்யா என்ற 14 வயது சிறுவனின் தந்தை நக்சல்பாரி இயக்கத்தின் ஆதரவாளர். அவரைக் கைது செய்ய போலீசார் தேடிவந்தபோது, அவர் இல்லாததால், அவருக்குப் பதிலாக அவரது மகனைப் பிடித்து பொடா சட்டத்தின்கீழ் போலீசார் சிறையிலடைத்துள்ளனர். சீமா குமாரி, ரோஷணி, சிலுதேவி ஆகிய சிறுமிகள் நக்சல்பாரி இயக்கத்தின் இரகசிய உளவாளிகளாகச் செயல்பட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டு ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். வினோத்சிங் என்ற 12 வயது சிறுவன் தனது நண்பர்களான கயாசிங், தேவல்யாதவ் காமேஷ்ர் யாதவ் ஆகியோருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது, அவர்கள் அனைவருமே நக்சல்பாரிகளின் கூட்டாளிகள் என்று கைது செய்யப்பட்டு, ''பொடா''வின் கீழ் சிறையிடப்பட்டுள்ளனர். உண்மையில் இவர்களுக்கு நக்சல்பாரி பற்றியோ, ''பொடா'' சட்டம் பற்றியோ எதுவும் தெரியாது.

இதைவிட கொடுமை என்னவென்றால், எழுந்து நிற்கவோ நடமாடவோ முடியாத, 81 வயதான ராஜ்நாத் மக்டோ என்ற முதியவரும் பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு ''பொடா''வின் கீழ் சிறையிடப்பட்டுள்ளார். தனது சிற்றுண்டி விடுதியில் நக்சல்பாரி இயக்கத்தினருக்கு தேநீர் கொடுத்ததற்காக பன்சிதார் சாகு என்பவர் ''பொடா''வில் கைது செய்யப்பட்டுள்ளார். ரோபுல் குமாரி என்ற இளம்பெண் தனது கிராமத்தில் பெண்களை அணிதிரட்டி ஆணாதிக்க அடக்குமுறைகளை எதிர்த்ததற்காக பயங்கரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ளார். ஜார்கந்து மாநிலத்தில் நக்சல்பாரி இயக்கம் வேரூன்றி வருவதையும், ''பொடா'' பயங்கரம் பற்றியும் செய்தி சேகரித்து வெளியிட்ட குற்றத்திற்காக ''இந்துஸ்தான்'' என்ற இந்தி நாளேட்டின் செய்தியாளரான நரேந்திர சர்மாவும் ''பொடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்துவெறி கூட்டணி ஆட்சி நடக்கும் ஜார்கந்து மாநிலம்தான் ''பொடா'' கைதுகளில் முதலிடம் வகிக்கிறது. மனித உரிமை அமைப்புகளின் தகவலின்படி, அம்மாநிலத்தில் ஏறத்தாழ 3200 பேர் பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 75%-க்கும் மேலானோர் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினராவர். ''பொடா''வின் கீழ் சிறையிடப்பட்டுள்ள சிறுவர் - சிறுமிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 60 பேராகும்.

**''பொடா'' சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட மயந்திகுமாரி (மேலே) மற்றும் பிரபாகரன்; இவர்கள் பயங்கரவாதிகளாம்!**





''பொடா'' கைதுகளில் நாட்டிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கும், இந்துவெறியர்களின் கூட்டாளி சந்திர பாபு நாயுடு ஆளும் ஆந்திராவில், நக்சல்பாரி இயக்கமான மக்கள் யுத்தக் குழுவின் ஆதரவாளர்கள் கணக்கின்றி கைது செய்யப்பட்டுள்ளனர். ஓங்கோல் மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் ரிவேரியா என்கிற ஏ.கே. பாபு, ''பொடா'' சட்டத்தை எதிர்த்தும் ''மோதல்'' என்ற பெயரில் நக்சல்பாரிகள் நரவேட்டையாடப்படுவதை எதிர்த்தும் கவிதை எழுதியதற்காக ''பொடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். இதுதவிர, போலீசு அட்டூழியங்களை எதிர்த்த குற்றத்திற்காக மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சிறுகடைக்காரர்கள் கூட நக்சல்பாரி பயங்கரவாதிகளாகக் குற்றம் சாட்டப்பட்டு ''பொடா''வின் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்துவெறியர்களின் பாசிசப் பங்காளியான ஜெயா ஆளும் தமிழகத்தில், தமிழின ஆதரவாளர்களும் நக்சல்பாரி இயக்கத்தினரும் ''பொடா''வின் கீழ் வதைக்கப்பட்டு வருகின்றனர். ஜார்கந்து மாநிலத்தைப் போலவே, தமிழகத்திலும் பிரபாகரன், பகத்சிங் ஆகிய இரு சிறுவர்கள் பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் இறுதியில், தருமபுரி மாவட்டத்தில் நடந்த நக்சல்பாரி ஒழிப்பு வேட்டையின்போது குருசாமி என்ற 'சந்தேகிக்கப்படும் தீவிரவாதி' சிக்காததால் அவரது மகன் பிரபாகரனைப் பிடித்து ''பொடா'' சட்டத்தின் கீழ் வதைத்து வருகிறது, பாசிச ஜெயா அரசு.

முந்தைய காங்கிரசு ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத ''தடா'' சட்டத்தின் கீழ் 77,571 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இறுதியில் 1% பேர் மீதுதான் குற்ற ஆதாரம் நிரூபிக்கப்பட்டது. அதன் வழியில் ''தடா''வின் மறுபதிப்பான ''பொடா'' சட்டம் நாடெங்கும் தனது கொடுங்கரங்களை விரித்து பேயாட்டம் போட்டு வருகிறது. இந்துவெறி பாசிசத்தைத் திணிக்கவும் மறுகாலனியாதிக்கத்தை எதிர்க்கும் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கவும் போலீசாருக்கு வரம்பற்ற அதிகாரமளிக்கும் ஆள்தூக்கி பொடா சட்டத்தை முறியடிக்க, ஓட்டுக் கட்சி அரசியலுக்கு வெளியே உழைக்கும் மக்கள் ஓரணியில் திரளவேண்டியதே இன்றைய உடனடித் தேவையாக உள்ளது. ❑

www.padippakam.com

# அயோத்தியில் அகழ்வாராய்ச்சி நீதிமன்றத்தின் கரசேவை

அயோத்தி பாபரி மசூதி இடிப்பு - இராமன் கோயில் கட்டுமானத் திட்டத்தில் இந்துமதவெறி பார்ப்பன பயங்கரவாதிகள் இவ்வளவு தூரம் சண்டித்தனம் செய்வதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, அரசு எந்திரம் குறிப்பாக, நீதித்துறை அதற்கு உடந்தையாக இருப்பதாகும். இத்தனைக்கும் இந்த விவகாரத்தில் வழக்குமன்றத் தீர்ப்பை அப்படியே ஏற்பதாக ஆரம்பம் முதலாக இசுலாமிய அமைப்புகள் ஒப்புக் கொண்டு வருகின்றன.

ஆனால், இந்துமதவெறியர்களோ, ''வழக்கு மன்றத் தீர்ப்பை ஏற்க முடியாது. நாட்டின் பெரும்பான்மையினரான இந்துக்களின் மத நம்பிக்கையில் சட்டமோ, நீதிமன்றமோ வேறு எந்த அமைப்போ தலையிட முடியாது'' என்று அடாவடித்தனமாகப் பேசி வருகிறார்கள். இதுவும் ஒரு சூழ்ச்சிதான். மத விவகாரங்களில் ''நம்பிக்கை''தான் இறுதி முடிவைத் தீர்மானிக்கக் கூடியது என்றால் எல்லா விவகாரங்களுக்கும் மத சாயம்பூசி, கேள்விக்கு இடமின்றி தாம் நினைத்ததைச் சாதித்துக் கொள்ளலாம் என்பது ஒரு தந்திரம்.

அடுத்து, ''நீதிமன்ற முடிவை ஏற்க மாட்டோம் என்று சண்டித்தனம் செய்தால், எதிராளி ஏற்போம் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவான். அந்த நிலையில் நீதிமன்ற முடிவு தனக்குச் சாதகமாக வரும்படி செய்துவிட்டால் எதிராளி அதை ஏற்கவேண்டி வரும்'' என்பது ஒரு தந்திரம்.

மூன்றாவதாக, தாங்கள் நீதிமன்ற முடிவை ஏற்பதாக ஒப்புக் கொள்வதற்கே ஒரு விலை கோரலாம். சான்றாக, அயோத்திப் பிரச்சினையில் தான் சமரசம் செய்வதாக காஞ்சி ஓடுகாலி சங்கராச்சாரி ஜெயேந்திரன் நாடகமாடிய போது, நீதிமன்ற முடிவை ஏற்பதாக இவர்கள் ஒப்புக் கொள்வதற்கு ஈடாக, அயோத்தியில் பாபரி மசூதி இருந்த இடத்தைச் சுற்றி அரசு கையகப்படுத்தியுள்ள 67.73 ஏக்கர் நிலத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதாடினார்.

இந்துமத்வெறி பாசிச பார்ப்பன பயங்கரவாதிகளின் இப்படிப்பட்ட சதிகளுக்கு ஆரம்பம் முதலே வழக்கு மன்றங்கள் உடந்தையாக இருந்திருக்கின்றன. நானூறு ஆண்டுகளுக்கு மேலாக இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலமாக இருந்து வந்த பாபரி மசூதிக்குள் 1949-ஆம் ஆண்டு ஒரு நள்ளிரவு புகுந்த இந்துமதவெறியர்கள் இராமன் - சீதை பொம்மைகளை வைத்துவிட்டார்கள். உண்மையில் இது ஒரு சாதாரண கிரிமினல் குற்ற நடவடிக்கை என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் பிடித்து கிரிமினல் சட்டப்படி அப்போதே தண்டித்திருந்தால் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது.

திடீரென்று, கள்ளத்தனமாகவும், சட்ட விரோதமாகவும் மசூதிக்குள் வைக்கப்பட்ட பொம்மைகளைத் தூக்கிக் கடாசிவிட்டு, இசுலாமியர்கள் வழிபாடு நடத்துவதற்கு வழிவகை செய்திருந்தால் பிரச்சினை மேலும் முற்றியிருக்காது. ஆனால், மத்தியிலும், மாநிலத்திலும் அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசாங்கமும், அதிகார வர்க்கமும், இது ஒரு சிவில் விவகாரம் - மத நம்பிக்கை சம்பந்தப்பட்டது என்று வழக்குத் தொடரவும், பார்ப்பன ஆதிக்கம் மிகுந்த அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் லக்னோ கிளை அதற்குத் தகுந்தாற்போன்று தீர்ப்புகள் வழங்கவும் அயோத்தி விவகாரம் இன்று ஒரு நச்சுமரமாக வளர்ந்து விட்டது.

அப்போதிருந்து, லக்னோ உயர்நீதி மன்றக் கிளையின் சமீபத்திய உத்திரவு வரை அது எல்லா விதத்திலும் நேரடியாகவே இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு சாதகமாகவே நடந்து கொண்டு வருகிறது. புது தில்லி உச்சநீதி மன்றமோ மிகவும் தந்திரமாகவும், இரண்டும் கெட்டான் தீர்ப்புகள் மூலமாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்து மத வெறி பாசிஸ்டுகளுக்குச் சாதகமாக செயல்பட்டு வருகிறது.

அயோத்தியில் 'பிரச்சினைக்குள்ளாகி, இருக்கும் இடத்தில் பாபரி மசூதி கட்டுவதற்கு முன்பு ஒரு கோவில் இருந்ததா என்பதை ஒரு மாதத்துக்குள் அகழ்வாராய்ச்சி நடத்தி முடித்து அறிக்கை அளிக்கும்படி இந்தியத் தொல்லியல் நிறுவனத்திற்கு லக்னோ உயர்நீதி மன்றக் கிளை கடந்த மார்ச் 5-ந் தேதி உத்திரவு போட்டுள்ளது. அந்த வேலை உடனடியாகத் தொடங்கி விரைவாகவும் நடக்கிறது.

இந்த அகழ்வாராய்ச்சி வேலையில் ''தோஜோ - இந்திய விகாஸ் இண்டர் நேஷனல்'' என்று டெல்லியில் அமைந்துள்ள கனடா நாட்டு நிறுவன நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ளும்படி நீதிமன்றம் பணித்துள்ளது. ஏற்கனவே, அயோத்தியில் ''ராடார்'' கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்தியுள்ள அந்த நிறுவனம் தனது முடிவுகளை சோதித்தறிய அகழ்வாராய்ச்சி அவசியமெனக் கோரியதன் விளைவாகவே இந்த உத்தரவு என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே, அந்த நிறுவனம் கொடுத்த உறுதிப்படுத்தாமலிருக்கும் முடிவுகளைக் கொண்ட அறிக்கை, வழக்கில் சம்பந்தப்பட்ட இந்து - இசுலாமியத் தரப்பினரிடம் அம்முடிவுகளை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டுள்ளது. கனடா நிறுவன ''ராடார்'' ஆராய்ச்சி இந்துக்களுக்கு சாதகமாக உள்ளதென்று வெளியே புளுகி வரும் இந்துமதவெறியர்கள், இந்த அகழ்வாராய்ச்சி நடத்துவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பாபர்மசூதியை இடித்த மண்மேட்டின் மீது அமைக்கப்பட்டுள்ள தற்காலிக இராமன் கோவிலுக்கு எவ்விதப் பாதிப்புமில்லாமல் அகழ்வாராய்ச்சி நடத்துவதாக லக்னோ உயர்நீதி மன்றம் உறுதி கொடுத்ததன் அடிப்படையில்தான் பின்னர் ஒப்புக் கொண்டனர்.

இருப்பினும், லக்னோ உயர்நீதி மன்றக் கிளையின் இந்த உத்தரவே பல வகையிலும் தவறானதாகும். பாபரி மசூதி கட்டப்படுவதற்கு முன்பு அந்த இடத்தில் ஒரு இந்துக் கோயிலோ, இந்துக் கட்டிடமோ இருந்ததாவென்று கருத்துக் கூறும்படி உச்சநீதி மன்றத்திடம் அப்போதைய நரசிம்மராவின் தலைமையிலான காங்கிரசு அரசு கேட்டிருந்தது. இக்கேள்வியின் மீது கருத்துக் கூறவே முடியாது என்று மறுத்துவிட்டது உச்சநீதி மன்றம். ''இதைத் தீர்மானிப்பதற்கு நீதி மன்றத்துக்குத் தகுதி கிடையாது. தொல்லியல் அகழ்வாராய்ச்சி மற்றும் வரலாற்று வல்லுநர்கள் தரும் ஆதாரங்கள் மற்றும் குறுக்கு விசாரணைகள் மூலம் இக்கேள்விக்கு விடை காணலாம். ஆனால் அப்படிப்பட்ட ஆதாரங்களைப் பரிசீலித்து முடிவு கூறுமளவுக்கு நீதிமன்றத்துக்கு வல்லமை - நிபுணத்துவம் கிடையாது. நிபுணர்களின் ஆய்வு முடிவுகள் மீது விசாரணையும் மதிப்பீடும் செய்யாது அப்படியே ஏற்றுக் கொள்ளத்தான் முடியும். அவ்வாறு செய்வது ஏதாவது ஒரு தரப்புக்குச் சாதகமாக அமைந்துள்ளதாக விமர்சனத்துக்


படிப்பகம்

www.padippakam.com



அயோத்தி பாபர் மசூதி வளாகத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிக்குச் செல்லும் தொழிலாளர்கள்: வரலாற்று உண்மையைக் கண்டுபிடிக்கும் முயற்சியா? சதியா?

குள்ளாகும்'' என்று 1994 தீர்ப்பின் போதே உச்சநீதி மன்றச் சிறுபான்மை கருத்துக் கூறிவிட்டது.

இக்கருத்தைக் கணக்கில் கொள்ளாமலேயே லக்னோ உயர்நீதி மன்றக் கிளை அகழ்வாராய்ச்சி உத்திரவு போட்டுள்ளது. அந்த வழக்கு மன்றத்தின் முன்பு வாதாடிய இந்து மனுதாரர் களின் வழக்கறிஞர்கள் தாம், பாபரி மசூதி இருந்த இடத்தில் ஒரு கோயில் இருந்ததாவென்று தீர்மா னிக்கும்படி கோரினர். இந்த வழக்கின் எதிர் மனுதாரரான இசுலாமிய மைய வக்பு வாரியமோ, பாபரி மசூதி நில உரிமை வழக்குக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை என்று வாதாடியது.

ஒரு தரப்பின் அனுபோக - பூர்வீக உரிமையின் கீழுள்ள சொத்தின் மீது யாராவது புதிதாக உரிமை பாராட் டினால், அவர்கள்தாம் அதற்கான ஆதா ரங்களை முன்வைத்து உரிமை கோர வேண்டும். ஒரு தரப்பினர் சார்பாக ஆதாரங்களைத் தேடும் வழிமுறையை வழக்குமன்றம் வகுக்க வேண்டிய தில்லை. அப்படிச் செய்வது அத்தரப் புக்கு சாதகமாக வழக்குமன்றமே செயல் படுவதாகும். இந்த வேலையில்தான் லக்னோ உயர்நீதி மன்றக் கிளை ஈடுபட் டிருக்கிறது. இதுசரிதான் என்றால் விளைவு விபரீதமாகும். ஏற்கனவே 3000-க்கும் மேற்பட்ட மசூதிகள், தர்காக்கள், நினைவுச் சின்னங்கள் இன்னும் புதிது புதிதாக பல இசுலாமிய உடமைகள் மீது இந்துமதவெறியர்கள் உரிமை பாராட்டுகிறார்கள். அங்கெல்லாம் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்வதாக முடியும்.

அகழ்வாராய்ச்சி மூலம் உண்மையைக் கண்டறிந்தால் நல்லது தானே என்று சிலர் கருதலாம். ஆனால் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் தொல்லியல் துறையானது, ஆர்.எஸ்.எஸ்.இன் தீவிரத் தொண்டனும், பா.ஜ.க.வின் முன்னாள் தலைவரும், இன்னாள் மந்திரியும், பாபரி மசூதி இடிப்பில் பங்கேற்றவரு மான முரளி மனோகர் ஜோஷி என்ற பார்ப்பன வெறியனிடம் உள்ளது. இவர் ஏற்கனவே தன்னிடம் உள்ள மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தை காவிமய மாக்கி வைத்திருக்கிறார். அனைவ ருக்கும் தெரியவே பாடப் புத்தகங் களில், வரலாற்று ஆராய்ச்சிக் கவுன் சிலில் ஆர்.எஸ்.எஸ். இந்துவெறியர் களை நியமித்து பல பித்தலாட்டங் களைப் புகுத்தினார். தொல்லியல் துறை யிலும் தனது ஆர்.எஸ்.எஸ். சகபாடி களை நுழைத்து வைத்திருக்கிறார்.

இதற்கு முன்பாகவே பாபரி மசூ தியை இடித்த போது, முன்பு இராமன் கோயில் இருந்ததற்கான தொல்லியல் அகழ்வாராய்ச்சி ஆதாரங்கள் இருப்ப தாக இந்துமதவெறியர்கள் லக்னோ உயர்நீதி மன்றக் கிளையின் முன்பு சில பார்ப்பன தொல்லியல், அகழ்வாய்வு, வரலாற்று நிபுணர்களைக் கொண்டு சில தடயங்களைக் காட்டினர். ஆனால் அவை மோசடியானவை என்று நிரூபிக் கப்பட்டுவிட்டன. இப்போது மீண்டும் அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பாபரி மசூதி கட்டப்படுவதற்கு முன்பு அந்த இடத்தில் இந்துக் கோவில் ஒன்று இருந்தது என்று வாதிடுவதற்கு ஆதாரமாக ஏதாவது சில பொய்யான தடயங்களைத் தயாரித்து பித்தலாட்டம் செய்வது இந்துவெறி பாசிஸ்டுகளால் முடியாத காரியமில்லை. அப்படி எதை யாவது காட்டினால்போதும் அவர்க ளுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூற ''கோர்ட்டுகளும்'' தயாராக உள்ளன. இவ்வாறு சந்தேகிப்பதற்கான கார ணங்கள் - முன்னுதாரணங்கள் நிறை யவே உள்ளன.

பாபரி மசூதிக்குள் இராமன் பொம்மைகளைத் திடீரென்று - கள்ளத்த னமாக வைத்ததும், அந்தக் கட்டிடத்தை இழுத்து மூடும்படி லக்னோ வழக்கு மன்றம் முதலில் உத்திரவு போட்டது. அதன் மூலம் இசுலாமியருக்கான உரி மையை மறுத்தது. பிறகு அந்த நில உடைமை மீதான வழக்கை விசாரித்து தீர்ப்புக் கூறாமல் 37 ஆண்டுகள் கிடப்பில் போட்டது. அதன்பிறகு மசூ தியைத் திறந்துவிட்டு தொழுகையும் நடத்தலாம், பூசையும் நடத்தலாம் என்று அனுமதித்தது. உருவ வழி பாடு நடக்கும் இடத்தில் இசு லாமியர்கள் தொழுகை நடத்த மாட்டார்கள் என்பதை அறிந்தே இந்த உத்திரவு போட்டது. இதையே ஆதாரமாக வைத்து அங்கு இருந்தது- இவ்வளவு காலம் தொழு கையே நடக்காத ஒரு பாழ டைந்த கட்டிடம்தான் என்று இந்துவெறியர்கள் வாதிட் டனர்.

வழக்குமன்றத்தில் நான்கு மனுக்கள் தீர்வுக் காகக் காத்திருக்கும்போதே, பாபரி மசூதியை இடித்து கோயில் கட்டும் திட்டத்தை அறிவித்து, செங்கல் பூசை, பூமி பூசை, கால்கோல் பூசை, யாகங்கள் - வேள்விகள், சிறப்பு வழிபா டுகள், இரத யாத்திரைகள் எல்லாம் நடத் துவதற்கு வழக்கு மன்றமோ, நிர்வாக எந்திரமோ தடை விதிக்கவில்லை.

கட்டுமானப் பணிக்கான பூசை நடத்தப் போவதாகக் கூறி லட்சக்கணக் கான இந்துவெறி குண்டர்களைத் திரட்டிக் கொண்டு மசூதியை இடிக்க மாட்டோம் என்று அவர்கள் கொடுத்த வாக்குறுதியை ஏற்று, பூசை நடத்த உச்ச நீதி மன்றம் அனுமதித்தது. மசூதி இடிக் கப்பட்டு 11 ஆண்டுகளாகியும் அந்தக் குற்றவாளிகளை எந்த வழக்கு மன்றமும் தண்டிக்கவேயில்லை. குற்றவாளிகளில் சிலர் மத்திய அமைச்சர்களாகவும் உள்ளனர். அவர்கள் தண்டிக்கப்படுவ தற்கு வழக்கு மன்றங்களே தடைகள் போடுகின்றன.

மதச்சார்பற்றதாகக் கூறிக்கொள்ளும் உச்சநீதி மன்றமோ இந்துத்துவா சித்தாந் தத்துக்கு நியாயப்படுத்தும் விளக்கங்கள் அளித்துத் துணை நிற்கிறது. பால்தாக் கரே, சிங்கால், தொகாடியா என்று பார்ப்பன பயங்கரவாதிகள் இந்து மத வெறிப் பிரச்சாரங்களில் பகிரங்கமாக ஈடுபட்ட போதும் தலையிட்டு அவர் களைத் தண்டிக்க முயலவும் இல்லை. தடா, பொடா சட்டங்களைப் பயன்ப டுத்தி, அப்பாவி இசுலாமிய இளைஞர்க ளுக்கு மரணதண்டனை வழங்கத் தயங் காத நீதிமன்றங்கள், தாழ்த்தப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன் கொடுமைக் குற்றம் புரியும் மேல்சாதிக்கா ரர்களை, சாதிய அமைப்பு முறைப்படியே நியாயம் கற்பித்து விடுதலை செய்கின் றன. இவற்றை எல்லாம் பார்க்கும்போது, நீதித்துறையே பார்ப்பன பயங்கரவாத நிறுவனங்களில் ஒன்றெனவே தெரிகிறது!

❑ குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

## தியாகத் தோழர் பீட்டர் அந்தோணி

# மக்களுக்காக வாழ்ந்து மரணத்தை வென்றார்!

இது இயற்கை மரணமல்ல, வெறும் அகால மரணமும் அல்ல; மானமும், மக்கள் மீது பற்றும் கொண்ட ஒரு தோழனின் வீர மரணம்.

ம.க.இ.க. தஞ்சைக் கிளையின் செயல்வீரரான **தோழர் பீட்டர் அந்தோணி** சாராய ரவுடிகளை எதிர்த்துப் போராடிக் கொலையுண்டார்.

தன்னுடைய வீட்டின் மொட்டை மாடியில் படுத்துறங்கிய 'குற்றத்துக்காக' ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றால், அதை உங்களால் நம்ப முடிகிறதா?

24-ஆம் தேதி இரவு சுமார் பத்து மணிக்கு தஞ்சை, விளார் ரோடு, நாராயணன் காலனியில் உள்ள தனது வீட்டின் மாடியில் தோழர் பீட்டர் அந்தோணி படுத்திருந்தார். ஆண்ட்ரூஸ் என்ற இன்னொரு தோழரும் அவருடன் படுத்திருந்தார். திடீரென அங்கே தோன்றிய சாராய ரவுடி மார்ட்டின், ''யார் நீங்கள், உங்களுக்கு இங்கே என்ன வேலை?'' என்று மிரட்டியிருக்கிறான். ''என்னுடைய வீட்டில் ஏறிவந்து என்னைக் கேள்வி கேட்க நீ யார்?'' என்று எதிர்த்துக் கேட்டிருக்கிறார் தோழர் பீட்டர்.

அவர்களை ஆபாசமாகத் திட்டி, ''உயிர் மேல் ஆசையிருந்தால் ஓடிவிடுங்கள்'' என்று மிரட்டியிருக்கிறான் அந்த ரவுடி. அவனைத் துணிவுடன் எதிர்த்து மோதினார் தோழர் பீட்டர். தோழர்கள் இருவரும் அவனை மடக்கிப் பிடித்து விட்ட நேரத்தில் இன்னொரு சாராய ரவுடிக் கும்பல் மார்ட்டினுக்கு ஆதரவாக ஓடி வந்தது. அதன் பிறகும் தோழர் பீட்டர் பணியவில்லை. எனினும், அந்தக் கும்பலின் தாக்குதலை இருவர் மட்டும் நின்று சமாளிக்கவும் முடியவில்லை.

தோழர் ஆண்ட்ரூஸைத் தாக்கி படிக்கட்டில் உருட்டி தள்ளிய பிறகு தோழர் பீட்டரைச் சுற்றி வளைத்துத் தாக்கிய அந்தக் கும்பல், அவரை மாடியில் இருந்து தெருவில் தூக்கி வீசியது. எலும்பு முறிந்து, ரத்த நாளங்கள் வெடித்து மருத்துவமனையில் இரண்டு நாட்கள் உயிருக்குப் போராடி, 27-ஆம் தேதி மாலை 6.30-க்கு தோழர் பீட்டர் மரணத்தைத் தழுவினார்.

இதுதான் தஞ்சை நகரம். கிரிமினல்களையும் கிரிமினல்களின் ...யும் பிடுங்கிச் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொள்ளும் போலீசு ஆட்சி செய்யும் தஞ்சை நகரம். உயிர் மேல் ஆசை இருந்தால் பீட்டர் பேசாமல் இறங்கி ஓடி இருக்கலாம். தன் குடும்பத்தை மட்டும் நினைத்திருந்தால் 'அநாவசிய சண்டை எதற்கு' என்று பின்வாங்கியிருக்கலாம். ஆனால், அடங்க மறுத்து அவருக்குள்ளிருந்து வெடித்த கோபம் என்பது அநீதிக்கெதிரான வர்க்க கோபம். போலீசு - கிரிமினல் கூட்டணியால் புழு பூச்சிகளைப் போல நசுக்கப்படும் ஏழை - எளிய மக்களெல்லாம் உள்ளுக்குள் வைத்து குமுறுகிறார்களே, அந்த குமுறல்தான் தோழர் பீட்டரின் கோபம்.

தியாகத் தோழர் பீட்டர் அந்தோணி



தோழர் பீட்டரின் கொலை எதிர்பாராமல் திடீரென்று நடந்துவிட்ட ஒரு சம்பவமல்ல. சாராய ரவுடிகளுக்கெதிராக தஞ்சை நகர பு.மா.இ.மு. மற்றும் ம.க.இ.க. தோழர்கள் நடத்தி வரும் போர்க்குணமிக்க போராட்டத்தின் தொடர்ச்சி இது.

தஞ்சை நகரில் பூக்காரத் தெரு எனும் பகுதியில் 40 ஆண்டுகளாகச் சாராய ரவுடி சாம்ராச்சியம் நடத்தி வந்த ''பட்டாளத்தார் குடும்பம்'' என்ற கிரிமினல் கும்பலின் கொட்டத்தை ஒடுக்கி அந்தப் பகுதியில் சாராய விற்பனையையும் கட்டைப் பஞ்சாயத்துக்களையும் தடை செய்திருக்கிறார்கள் தோழர்கள். இதனால் சாராய ரவுடிகள் மட்டுமின்றி அவர்களது புரவலர்களான போலீசும் வெறிபிடித்த நிலையில் இருந்து வந்தது.

சிறியதும் பெரிதுமாக நடந்த மோதல்கள் ஒவ்வொன்றிலும் சாராய ரவுடிகள் தோல்வியடைந்தார்கள். ''முன்னணித் தோழர்களைக் கொலை செய்வதுதான் வழி'' என்று முடிவு செய்த பட்டாளத்தார் கும்பல் கூலிக்குக் கொலைகாரர்களை அமர்த்தித் தயார் நிலையில் வைத்துக் கொண்டு மக்களை வேண்டுமென்றே சீண்டி வம்பிழுக்கத் தொடங்கியது. ''மக்களைச் சீண்டினால் ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் வருவார்கள்; சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களைக் கொலை செய்து விடலாம்'' என்பது அந்தக் கிரிமினல் கும்பலின் திட்டம்.

ஆனால் திட்டம் தவிடுபொடியானது. ஆத்திரம் கொண்ட மக்கள் மார்ச் 21-ஆம் தேதி காலை அந்தக் கிரிமினல் கும்பலின் தலைவனான பாலகிருஷ்ணனைக் கொன்றொழித்து விட்டார்கள். 'தலைவனை' இழந்ததால் நிலைகுலைந்த அந்தக் கும்பல் யாரையெல்லாம் கைகாட்டியதோ அவர்களையெல்லாம் பிடித்து வந்தது போலீசு.

சம்பவம் நடந்தபோது ஊரிலேயே இல்லாத பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் பரமானந்தம் உள்ளிட்டு 9 பேர் மீது கொலை வழக்கு பதிவு செய்து,


படிப்பகம்

www.padippakam.com

6 பேரைச் சிறை வைத்துள்ளது போலீசு. அந்தக் கிரிமினல் கும்பலோ ரவிச்சந்திரன் என்ற அப்பாவி இளைஞனை வெட்டியிருக்கிறது. மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அவர் மீதும் கொலை வழக்குப் போட்டிருக்கிறது போலீசு.

கொலை செய்வதற்கு கிரிமினல்களும், கைது செய்வதற்கு போலீசும் தேடிக் கொண்டிருந்த அன்றைய பதட்டமான சூழலில் அச்சம் என்பதே சிறிதும் இன்றி அமைப்புப் பணியாற்றிக் கொண்டிருந்தார் பீட்டர். மருத்துவமனையில் இருந்த இரவிச்சந்திரனைப் பார்த்து விட்டு, வீடு திரும்பிய அன்றைய இரவில்தான் தோழர் பீட்டர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரைக் கொலை செய்த சாராயக் கும்பலுக்கும் சரக்கு சப்ளை செய்வது பட்டாளத்தார் கும்பல்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த நள்ளிரவில் தன்னந்தனியாக எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட அந்த தருணத்தில், 'எதிர்த்து நில்!' என்று அவருடைய உள்ளத்தின் உள்ளிருந்து ஆணையிட்டது, நக்சல்பாரி அரசியல்.

ஆம்! தோழர் பீட்டர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ம.க.இ.க.வின் செயல் வீரர். அவர் உத்திரவாதமான வாழ்க்கை அமையப்பெற்ற ஓர் அரசு ஊழியர். அரசியல் பணி செய்தால் வேலையை இழப்போம் என்று அவர் எப்பொழுதும் அஞ்சியதில்லை. அவருக்கு மனைவியும் 7 வயது மகனும் இருக்கிறார்கள். எதை எண்ணியும் அவர் முடங்கியதில்லை. அமைப்பிற்காக மக்களுக்காக எதையும் இழக்க எப்போதும் அவர் தயங்கியதில்லை. எத்தகைய பணியை செய்வதற்கும் அவர் கௌவரம் பார்த்ததில்லை. பீட்டர் என்றால் சோர்வின் சுவடே தெரியாத சுறுசுறுப்பு. பீட்டர் என்றால் துன்பத்தைப் பொருட்படுத்தாத சிரித்த முகம். பீட்டரைப் போன்ற தோழர்கள் அரிதானவர்கள்.

பல அரிய கம்யூனிஸ்டு பண்புகளின் முன்மாதிரியாகத் திகழ்ந்த தோழர் பீட்டரின் இறுதி ஊர்வலமும் தஞ்சை நகரம் இதுவரை காணாதவொரு முன்மாதிரியைப் படைத்தது. அவர் பணியாற்றிய தொலைபேசித் துறையின் ஊழியர்கள், தமிழகம் முழுவதிலுமிருந்து தஞ்சையில் வந்து குவிந்த ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், பகுதிவாழ் மக்கள் என 2000 பேருக்கு மேல் திரண்ட அந்த இறுதி ஊர்வலம், போலீசுக்கும் சாராய ரவுடிகளுக்கும் எதிரான ஒரு போர்க் களமாய் காட்சியளித்தது.



**இறுதி அஞ்சலி செலுத்தும் ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதையன் (இடது) மற்றும் மாநில செயற் குழு உறுப்பினர் தோழர் காளியப்பன்.**

பீட்டரின் சாவுக்குப் பதில் சொல்ல வேண்டிய முதல் கொலைக் குற்றவாளி யாரோ ஒரு ரவுடி அல்ல, கிரிமினல்களின் கூடாரமான 'காவல்துறை' என்பதை உரத்து முழங்கியது ஊர்வலம். ''சாராய ரவுடிகளின் எச்சில் காசில் வயிறு வளர்க்கும் நாய்களே'' என்று ஆத்திரம் பொங்க முழக்கமிட்ட ஊர்வலத்தின் அருகில் காக்கிச் சட்டை ஒன்றைக் கூட காண முடியவில்லை. ''தோழர் பீட்டருக்கு எதிரிகளின் ரத்தத்தால் அஞ்சலி செய்வோம்'' என்ற முழக்கத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தனர் சாலையின் இருமருங்கிலும் நின்றிருந்த ஆயிரக்கணக்கான மக்கள்.

ஊர்வலத்தின் இறுதியில் மின் மயானத்தின் எந்திரவாய் தோழர் பீட்டரின் உடலை விழுங்கும் தருணத்தில் தோழர்கள் நெஞ்சம் வெடித்துக் கதறினார்கள்; முழங்கினார்கள் சபதமேற்றார்கள்.

எவ்விதச் சாதி - மதச் சடங்குகளுமின்றி அவரது உடல் எரியூட்டப்பட்டவுடன் மயானத்திலேயே நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தொலைபேசி ஊழியர் சங்கங்களின் தலைவர்கள், மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சிலைச் சேர்ந்த வழக்கறிஞர் ராஜு, தோழர் கிருஷ்ணமூர்த்தி, வி.வி.மு., தோழர் சேகர் பு.மா.இ.மு., தோழர் முகுந்தன் பு.ஜ.தொ.மு., ம.க.இ.க. மாநிலச் செயற்குழு தோழர்கள் சீனிவாசன், காளியப்பன், செயலர் தோழர் மருதையன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தோழர் பீட்டருடன் வாழ்ந்த நினைவுகளை, அவரது பண்புகளை ஒவ்வொருவரும் நினைவு கூற, நினைவு கூற ''எத்தகையதொரு சிறந்த தோழரை இழந்திருக்கிறோம்'' என்ற துயரம் எல்லோர் நெஞ்சையும் அழுத்தத் தொடங்கியது. ''மக்களுக்காக வாழ்ந்து மடிபவர்களின் பிரிவு தோற்றுவிக்கும் துயரம் மலையைவிடக் கனமானது'' என்றார் தோழர் மாவோ. நம் இதயம் அந்தச் சுமையை உணர்ந்தது.

**தஞ்சை நகரை உலுக்கிய இறுதி ஊர்வலம்.**



''மக்களுக்காக வாழ்ந்து மடி'' என்பதுதான் தோழர் பீட்டர் நமக்களித்திருக்கும் செய்தி. எதிரிகளுக்கும் ஒரு செய்தி இருக்கிறது. அதனை இறுதி ஊர்வலத்தில் பிரம்மாண்டமாக எழுதி எடுத்து வந்தார்கள் தோழர்கள். ''இறுதி ஊர்வலம் இன்று அருமைத் தோழன் பீட்டருக்கு. நாளை - சாராய ரவுடிகளே உங்களுக்கு!''

**ம.க.இ.க. - பு.மா.இ.மு., தஞ்சை.**



# கிரிமினல்களாக போலீசு:
# நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

தெருக்கூத்தில் முக்கிய நாயகர்கள் முதலில் தோன்றும் போது, அவருடைய முகத்தைப் படுதாவில் மறைத்துப் பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டுவார்கள். பிறகு, அவருடைய பராக்கிரமத்தைப் பாடி, படுதாவை விலக்கி, நாயகனைக் காட்டுவது வழக்கம்.

இப்போது தமிழக நீதிமன்ற வாசல்களில் இதே காட்சி அரங்கேறுகிறது. முகத்தை மூடிக்கொண்டு முக்கியப் புள்ளிகள் வருகிறார்கள். கூட்டம் பரபரக்கிறது. படுதா விலகுகிறது.

விபச்சாரம் செய்த சினிமா நடிகைகள், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த நிதி நிறுவன அதிபர்கள், காமக் களியாட்ட காவிச் சாமியார்கள், காக்கிச் சட்டை கயவாளிகள் அனைவரும் தெரிகிறார்கள். நீதிபதிகளின் முன்னாள் வரிசையாக நிறுத்தப்படுகிறார்கள். எல்லோரும் கூடி 'நீதி' பற்றி ஏதோ நீண்ட நேரம் பேசுகிறார்கள். கடைசியில் எல்லோரும் சிரித்த முகத்துடன் 'நீதி' பிழைத்துக் கொண்டதாகக் கூறிக் கலைந்து விடுகிறார்கள்.

முன்னாள் நடிகையான ஜெயலலிதாவின் ஆட்சியில் சமீபகாலமாக இதுதான் நடக்கிறது.

சென்னை - அண்ணா சாலை போலீசு நிலையத்தின் குற்றப் பிரிவு ஆய்வாளர் கர்ணன் யாருக்கும் அஞ்சாதவர், அதிரடி வீரர் என்று புகழப்பட்டவர். போலீசு கமிஷனர் விஜயகுமார் கையில் பரிசு வாங்கியவர். இப்போது குற்றவாளியாக நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப் பட்டுள்ளார்.

காரணம், சென்னையில் நகைகளைக் கொள்ளையடித்த கும்பல், அந்த நகைகளை மார்வாடிகளிடம் விற்றுவிட்டு ஆய்வாளர் கர்ணனுக்குத் தகவல் சொல்லும். இவர் அந்த மார்வாடிகளிடம் சென்று, திருட்டுப் பொருள் வாங்கியதாக மிரட்டிப் பல இலட்சங்களைப் பறித்துக் கொள்வார். அந்த நகைகளையும் புது நகைகளாக்கி விற்றுப் பணம் சம்பாதித்துக் கொள்வார்.

மேலும், சென்னையில் தங்கக்கட்டிகளை மொத்தக் கொள்முதல் செய்யும் நகைக்கடை அதிபர்களிடம் கொள்ளையடிக்கும் கிரிமினல் கும்பல்களிடமும் கூட்டு வைத்துப் பங்கு வாங்கியவர். அக்கிரிமினல்கள் கொடுத்த தகவல்கள் அடிப்படையில் நகைக்கடை அதிபர்களின் வீடுகளுக்குச் சென்று, மிரட்டித் தனியாகப் பணம் பறிக்க ஆரம்பித்தார்.

விழுப்புரம் நகை வியாபாரி பக்தவச்சலத்தை இவ்வாறு மிரட்டி, சென்னைக்குக் கடத்தி வந்து இரண்டரை லட்சம் பணம் பெற்று விடுவித்தார். 'எல்லை' மீறி வந்தவரை விழுப்புரம் போலீசு காட்டிக் கொடுக்க, இப்போது கைதானார். விபச்சாரம், கட்டை பஞ்சாயத்து, போலியான வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களுடன் கர்ணன் கூட்டு வைத்திருந்ததும் இப்போது வெளிவந்துள்ளது.

✸ இராமநாதன் சேலம் போலீசு கமிஷனர். சேலத்தில் ''பிஸினஸ் சொல்யூஷன்'' என்ற கணினி நிறுவனத்தின் பங்குதாரராக இருந்தவர். கோடிக்கணக்கில் மோசடி செய்தவர். இப்போது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

✸ சென்னை-பரங்கிமலை எஸ்.பி அலுவலக ஆயுதப்படைப்பிரிவு எஸ்.ஐ.காளிதாசை செங்கை - கிழக்கு மாவட்ட எஸ்.பி. பொன் மாணிக்கவேல் போலீசு நிலையத்திலேயே வைத்து அடித்தார். தண்டனையாக மைதானத்தில் ஓடவிட்டு, நந்தம்பாக்கம் போலீசு லாக்கப்பில் அடைத்தார். காரணம், முரளி, மோகன் மற்றும் செல்வமணி என்ற இரு தரப்பு சினிமா பைனான்ஸ் கொடுக்கல் வாங்கலில் இவரும் கட்டை பஞ்சாயத்தில் ஈடுபட்டு 'பங்கு' யாருக்கென மோதிக் கொண்டனர்.

''எங்களிடம் மாமுலை அதிகப்படுத்தி விட்டார்கள், உங்களுக்குச் சரியாக வருகிறதா?'' என்று தூத்துக்குடி சாராய வியாபாரிகள், மதுவிலக்கு போலீசை லஞ்ச ஒழிப்புத் துறையிடம் போட்டுக் கொடுத்தனர். பங்கு சரியாகக் கிடைக்காமல் பதறிப் போன லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி பெருமாள் சாமி, அதிரடி நடவடிக்கையில் இறங்கினார். மாமூல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கும் மதுவிலக்கு போலீசு டைரியை வெளியிட்டார். தூத்துக்குடி நகர போலீசு நிலைய இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் கைப்பட எழுதியிருந்த டைரியில், மதுவிலக்கு எஸ்.பி. நவநீத கிருஷ்ணன், ஏ.டி.எஸ்.பி சாலமோன், டி.எஸ்.பி சுப்பிரமணியன் ஆகியோர் பிடிபட்டனர்.

✸ சென்னை போலீசு கமிஷனர் பதவியிலிருந்த முத்துகருப்பன், சென்னை அண்ணாநகர் ரமணியிடமிருந்து 4 கிரவுண்ட் நிலத்தை மிரட்டிப் பறித்திருக்கிறார். பறிகொடுத்தவர் பல முறை போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. இப்போது நீதிமன்ற வழக்கு தொடுத்துள்ளார்.

இப்படி கோடீஸ்வரன், வெங்கடாசலம், அசோகன், கண்ணன் என்று ஒவ்வொரு போலீசு அதிகாரியாக நீதிமன்றத்திற்கு வருகின்

கமிஷனர் விஜயகுமாரிடம் விருது பெறும் சீருடை அணிந்த கிரிமினல் கர்ணன்.



www.padippakam.com

றனர்.

சட்ட விரோதம், சமூக விரோதம் என்று சட்டமியற்றி வைத்துக் கொண்டு, சட்ட விரோத செயல்களைத் தானே ஏக போகமாகச் செய்து வருகிறது, போலீசு.

கள்ளச்சாராயம், லாட்டரி, நீலப்படம், மணல், குவாரி, சந்தனமரம் திருட்டு, பிளேடு நிதி நிறுவனங்கள், கந்துவட்டி, காந்தப் படுக்கைகள் என அனைத்துச் சட்டவிரோதத் தொழில்களிலும் போலீசு கள்ளக்கூட்டு வைத்திருக்கிறது.

டான்சி நில ஊழல் புகழ் ஜெயலலிதாவோ, தன் பரிவாரங்களின் ஊழல்களை ஊக்குவிக்கிறார். 'வீரதீர' செயல் புரிந்தவர்கள் என்று போலீசுக்குப் பதக்கங்களும் பரிசுகளும் வழங்குகிறார். போலீசும் ஜெயலலிதாவிற்கு சைதாப்பேட்டை, சாத்தான் குளம் என்று அடுத்தடுத்து வெற்றிப் பரிசுகளை வழங்குகிறது.



ராமநாதன்

இது மட்டுமா? கருணாநிதியின் கைது படலம் தொடங்கி, பட்டினியில் தற்கொலை செய்து கொண்ட விவசாயியின் வாக்குமூல கடிதத்தை வைத்திருந்த சி.பி.ஐ. சட்ட மன்ற உறுப்பினர் சிவபுண்ணியம் வீடு புகுந்து நள்ளிரவு மிரட்டியது, ஜெயலலிதாவின் முறைகேடுகளை விமர்சித்த தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க. இரண்டாம் மட்டத் தலைவர்களைக் கைது செய்தது, சென்னை மெரினாவில் பத்திரிகையாளர்களைச் சுற்றிவளைத்துத் தாக்கியது, மூத்த பத்திரிக்கையாளர் சின்ன குத்தூசி மீது விசாரணை மிரட்டல் நடத்தியது - இப்படி நாளொரு கைதும் பொழுதொரு வழக்குமாக எதிரணியை முடமாக்குகிறது.

இதைத்தான், ''ராஜாவுக்கு செய்யும் சேவை, ராஜாங்கத்துக்குச் செய்யும் சேவை'' என்று திமிர் வழியக் கூறுகிறார், சி.பி.சி.ஐ.டி., டி.ஐ.ஜி. முகமது அலி. இவர்தான் கருணாநிதியைக் கைது செய்தவர். எம்.ஜி.ஆர் ஆட்சியில், மதுரையில் நீதிபதி தார்குண்டேவைத் தாக்கியவர்.

ஆதரவற்ற மக்கள், நீதிபதிகளைக் கடவுளுக்குச் சமமாக கருதுகின்றனர். ''சாமி நீங்கள்தான் நியாயம் வழங்க வேண்டும்'' என்று நீதி மன்றங்களில் மண்டியிடுகின்றனர். ஆனால், நீதிபதிகள் மோப்ப நாய்க்குக் காட்டும் கருணையில், கால் பங்காவது உழைப்பவர்கள் மீது காட்டுவதில்லை. உள்ளம் கொதிக்க வைக்கும் உண்மை இதோ.

மதுரை-காவல்துறை மோப்ப நாய் மல்லி, கோயம்புத்தூரில் நடந்த மோப்ப நாய்கள் பரிசுப் போட்டியில் வென்றது. அதற்கு ஒரு பரிசுத் தொகையும் கொடுக்கப்பட்டது. அந்நாயைப் பராமரித்த சுப்பிரமணியம், நாகராஜன் என்ற இரு போலீசார் அப்பரிசு பணத்தில் அங்கேயே குடித்துவிட்டு கோவை ரோந்து போலீசை மிரட்டியதால் கைதானார்கள். பராமரிப்பவர் இல்லாமல், நாய் மல்லி சோர்ந்து போய், சாப்பிட மறுத்தது. அரசு தரப்பில் வக்கீல், இதை நெஞ்சுருகி கோவை மாவட்ட நீதிபதியிடம் சொல்ல, அவரும் சோகத்தில் மூழ்கி, சிறையிலடைத்த இரண்டு போலீசையும் விடுவித்தார். ஆனால், எந்தவொரு குற்றமும் செய்யாமல் பல ஆயிரம் கைதிகள் விசாரணை என்ற பெயரில் சிறையில் வாழ்கின்றனர்.

பொறுக்கி அரசியல் பெற்றெடுத்த கிரிமினல் ஜெயா அரசின் போலீசு அட்டூழியங்களுக்கு அளவே இல்லை. ஆனால், இவையெல்லாம் ஏதோ ஒரு சில 'கறுப்பு ஆடு'களின் வேலை. இதனால் போலீசு துறையே களங்கப்பட்டு நிற்கிறது என்று பசப்புகின்றனர். சமீப காலமாக, தினமும் பல போலீசு திருட்டுக் கும்பல் பிடிபடுவதை அவர்களால் மறைக்க முடியவில்லை. கிரிமினல்களிடம் பங்கு கேட்பதைவிட குடும்ப நபர்களையே கிரிமினல் தொழிலில் இறக்குவது கொழுத்த லாபமாக இருக்கிறது. இதனால், தங்களுக்குள் இருக்கும் அதிகார எல்லை போலீசு கும்பலுக்கு போதவில்லை. அடுத்த போலீசு கும்பலின் அதிகார எல்லைக்குள் மூக்கை நுழைப்பது, சாதாரணமாகிவிட்டது. போலீசுக்குள் எல்லை பாதுகாப்பு போர் உச்சத்தை அடைந்துள்ளது. போரில் மூக்கறுப்பட்ட, கர்ணன்கள் கவச குண்டலங்கள் பிடுங்கப்பட்டு, காட்சிப் பொருளாக வைக்கப்படுகின்றனர்.

''கிரிமினல்களோடு கூட்டு வைத்துக் கொண்டு சட்டத்தை மீறும் போலீசு அதிகாரிகள் இனிமேல் தப்ப முடியாது'' என்று சவடால் அடிக்கிறார், சென்னை போலீசு கமிஷனர் விஜயகுமார். பெரும் கிரிமினல்கள் தங்களுடைய போலீசு நண்பர்கள் மூலம் சரண் அடைவது; பிறகு போலீசே கோர்ட் மூலம் தப்பிக்க வழிசொல்லிக் கொடுப்பது ஊரறிந்த ரகசியம். இப்போது பிடிபட்ட கிரிமினல்களின் வாக்கு மூலங்களில் ஏராளமான உண்மைகள் வெளிவந்திருக்கின்றன. கிரிமினல்களிடமிருந்து கைப்பற்றிய பொருட்களை போலீசு பங்குபோட்டு கொண்டு, அதற்கு கைமாறாக சில்லறை வழக்குகளைப் போட்டு, விடுதலைக்கு உதவியிருக்கிறது. கிரிமினல்களின் செல்போன் எண்களை வாங்கி வைத்துக் கொண்டு கூட்டைத் தொடர்கிறது. கொள்ளையில் பங்கை ஏமாற்றும் கிரிமினல்களின் குடும்ப உறுப்பினர்களைக் கைது செய்து வழிக்குக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு சட்ட விரோதச் செயலுக்கும் தனிரேட் என்று கறாராக கடைபிடிக்கப்படுகிறது இதை மீறும் போது தான், 'கடமை' தவறிய கிரிமினல்களும், 'கடமை' தவறிய போலீசுக்காரர்களும் களையெடுக்கப் படுகிறார்கள்.



முகமது அலி

ஆக, கிரிமினல்கள் இல்லாமல் போலீசு இல்லை போலீசு இல்லாமல் ஜெயா ஆட்சியில்லை. நீதிமன்ற பாதுகாப்பு இல்லா மல் இக்கும்பல்கள் நீடிக்க வழியில்லை.

பார்ப்பன பாசிச ஜெயா கும்பல், அதை தாங்கும் போலீசு - இப்படித்தான் ரத்தமும் சதையுமாக, விரலும் நகமுமாக பிரிக்கமுடியாமல் பின்னிப் பிணைந்துள்ளன. இவை, முதலாளித்துவ பத்திரிக்கைகள், எதிரணி ஓட்டுக் கட்சிகள் சொல்வதுபோல், கூடையில் இருக்கும் ஒருசில அழுகிய தக்காளிகளோ, மந்தையில் இருக்கும் ஒரு சில கறுப்பு ஆடுகளோ அல்ல. ஒட்டு மொத்த போலீசும் அழுகிய சதை பிண்டம், இதை அறுத்தெறிவதன் மூலம் மட்டும் தான் மக்கள் ஆரோக்கியமான சமுதாயத்திற்கு அடியெடுத்து வைக்க முடியும்.

மக்களின் நண்பர்கள், சமூக காவலர்கள் என்று பட்டம் சூட்டிக் கொண்டு மக்களின் மீது சுற்றிக் கொண்டிருக்கும் மலைப்பாம்பைத் தாக்கி அழிப்போம். கிராமங்கள், நகரங்கள், தெருக்கள் என எங்கும் மக்கள் குழுக்களைக் கட்டி நாமே கிரிமினல்களைத் தண்டிப்போம். போலீசுக்கு வேலையில்லையென விரட்டியடிப்போம்.

❑ பச்சையப்பன்

# கிரிக்கெட் ரசிகர்களா? ஆர்.எஸ்.எஸ்.இன் அடியாட்களா?

தென்னாப்பிரிக்காவில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்ட மொன்றில், இந்திய அணி பாகிஸ்தான் அணியை வென்றதை, இந்தியா பாகிஸ்தானைப் போரில் வென்றதைப் போல 'இந்துக்கள்' கொண்டாடினார்கள். இந்த வெற்றியை வெறியோடு கொண்டாடிய 'இந்துக்களில்' பெரும்பாலோர் ஆர்.எஸ்.எஸ்.இன் உறுப்பினர் கிடையாது. என்றாலும், முசுலீம் எதிர்ப்பு இந்துமதவெறி, பாக். எதிர்ப்பு இந்திய தேசிய வெறி என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் பார்பன-பாசிச அரசியல் அவர்களிடம் பதுங்கிக் கிடப்பதை, அன்று பச்சையாகக் காண முடிந்தது. ''எய்ட்ஸ்'' நோயை உண்டாக்கும் ''எச்.ஐ.வி.'' நோய்க்கிருமி உடம்புக்குள் பதுங்கிக் கிடந்து, திடீரெனத் தாக்குமாம். அந்த நோய்க் கிருமி போல ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் 'அப்பாவி இந்துக்களிடமும்' பதுங்கிக் கிடக்கிறது.

உலகக் கோப்பைக்காக நடந்த அனைத்துப் போட்டிகளும் சென்னை - மெரீனா கடற்கரையில், திறந்தவெளியில் பெரிய திரையில் திரையிடப்பட்டன. பாக்.-இந்தியா இடையே போட்டி நடந்த அன்று, பாக். அணியை இந்திய அணி வென்றவுடன், போட்டியைப் பார்க்கவந்த ஒருவன், ''இங்கே முசுலீம் எவனாவது இருந்தா ஓடிப் போயிடுங்க'' என வெறி கொண்டு கத்தியிருக்கிறான். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டிருந்த கூட்டத்தில் இதற்கு எதிராக ஒரு சிறு முணுமுணுப்பு கூட எழவில்லை. அப்படியென்றால், இவர்களை கிரிக்கெட் ரசிகர்கள் என்பதா? ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பதா?

இந்தியா-பாக். இடையே போட்டி நடந்து முடிந்த மார்ச் 1 இரவில், புது தில்லி இன்னொரு தீபாவளியைக் கண்டது - அத்துணை வான வேடிக்கைகள். அதற்கு முன் அறிமுகம் இல்லாத நபர்கள் கூட ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டது, தில்லி தொடங்கி கன்னியாகுமரி வரை நடந்தது.


கிரிக்கெட் போட்டியையும், கிரிக்கெட் வீரர்களையும் பன்னாட்டு நிறுவனங்கள் குத்தகைக்கு எடுத்து வைத்திருப்பது ஊரறிந்த உண்மை. பாக். அணியிடம் இந்திய அணி தோற்றுப் போயிருந்தால் கூட, இந்திய அணி வீரர்கள் 'தேசமே' தோற்றுப் போய் விட்டதாகக் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். மாறாக, தோல்வியினால் தமது வரும்படி குறைந்துவிடுமோ என்றுதான் கவலைப்பட்டிருப்பார்கள். ஆனால், தெருவில் நின்று கொண்டு ''டிஜிட்டல்'' டி.வி. பெட்டியில் விளையாட்டைப் பார்க்கும் ரசிகனின் மூளையில், இந்தியா - பாக். கிரிக்கெட் போட்டி எல்லையில் நடக்கும் சண்டையாக ரசவாதம் அடைகிறது.

அதனால்தான், பஞ்சாப் மாநிலத்தில் இந்தியா - பாக். எல்லையையொட்டி அமைந்துள்ள அட்டாரி, தேய்காலா, ரட்டன் கல்லா கிராம மக்கள் பட்டாசை வெடித்துக் கொண்டே, ''பால் கேட்டால் பாயசம் தருவோம்; காசுமீரைக் கேட்டால்....'' என பாகிஸ்தானைப் பார்த்துக் கத்தியிருக்கிறார்கள். பெயர் தெரியாத 'ரசிகர்' ஒருவர், ''நாம் அவர்களைப் போர்க் களத்திலும் வீழ்த்தி விட்டோம்; கிரிக்கெட் ஆடுகளத்திலும் வீழ்த்தி விட்டோம்'' எனக் கூறி வெற்றியைக் கொண்டாடி இருக்கிறார்.

'அப்பாவி இந்துக்களே' இந்த அளவிற்கு ஆட்டம் போட்டிருக்கும் பொழுது, ஆர்.எஸ்.எஸ். கும்பல் இந்திய அணியின் வெற்றியை அடக்கியா வாசித்திருக்கும்?

இந்திய கிரிக்கெட் அணிக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும் இடையே போட்டி நடந்த மார்ச் 1 அன்று பார்ப்பன பண்டிகையான மகா சிவராத்திரியும் சேர்ந்து கொண்டது. இது, ஆர்.எஸ்.எஸ்.இன் வேலையை மிகவும் சுலபமாக்கிவிட்டது. போட்டியில் இந்தியா வெற்றி பெற வேண்டும் என்பதற்காக யாகம், சிறப்புப் பூசைகளை நடத்திய இந்து மதவெறி அமைப்புகள், இந்திய அணி வென்றதையடுத்து, வெற்றி ஊர்வலங்களை நடத்தின. கர்நாடகாவிலும், குஜராத்திலும் இந்த வெற்றி ஊர்வலங்கள், இந்து மதவெறிக் கலவரங்களாக மாற்றப்பட்டன.

கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும், குல்பர்கா மாவட்டத்தில் ஆலந்திலும், பெல்காம் மாவட்டத்தில் சிக்கோடியிலும் கிரிக்கெட் போட்டி நடந்து முடிந்த இரவும், அதற்கு மறுநாளும் இந்து மதவெறிக் கும்பல் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்தியது. அந்தக் கலவரங்களை நியாயப்படுத்தவும், கலவரங்களைப் பிறபகுதிகளிலும் தூண்டிவிடும் நோக்கத்தோடும், ''இந்தியா வெற்றி பெற்றதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், முசுலீம்கள் ஹுப்ளி நகரில் தேசியக் கொடியை எரித்துவிட்டதாகவும், தேவர ஜுவன ஹள்ளி என்ற இடத்தில் மாரியம்மன் கோயிலைச் சேதப்படுத்திவிட்டு, அம்மன் சிலையைத் திருடிக் கொண்டு போய் விட்டதாகவும் வதந்தி பரப்பப்பட்டது.






படிப்பகம்
www.padippakam.com

www.padippakam.com



இந்திய அணியின் வெற்றிக்காக போபாலில் யாகம் நடத்தி விட்டு, இந்தியா - பாக். போட்டியைப் பார்க்கும் பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த இந்து மதவெறியர்கள்.

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் நடத்தப்பட்ட வெற்றி ஊர்வலத்தின் பொழுது, ஒரு சிறுவன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான்; கடைகளும், வாகனங்களும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

இந்த 'வெற்றிக் கொண்டாட்டங்கள்' தெருவோடு மட்டும் நின்றுவிடவில்லை. நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங், ''இந்திய அணி பாகிஸ்தானை வென்று விட்டதால், உலகக் கோப்பை போட்டிகளின் பொழுது இந்திய அணியினர் பெறும் பரிசுகள் அனைத்திற்கும் வருமான வரியைத் தள்ளுபடி செய்வதாக'' அறிவித்தார்.

தெருவில் நின்று ஊளையிட்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்களுக்கு இணையாக, ''பாகிஸ்தானை வென்று விட்டதால், இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றுமா, இல்லையா என்பதெல்லாம் எனக்குப் பெரிய விசயமல்ல'' என நிதியமைச்சரும் பாக். எதிர்ப்பைக் கக்கினார். இந்திய இராணுவத் தளபதி விஜ், ''உங்களால் நாடு பெருமையடைந்து விட்டது'' என்ற வாழ்த்துச் செய்தியை தென்னப்பிரிக்காவுக்கு அனுப்பி வைத்தார். வாழ்த்து என்ற போர்வையில் நடந்த இந்த பாக். எதிர்ப்பு பஜனையில் எதிர்க் கட்சிகளும் போட்டிபோட்டுக் கொண்டு கலந்து கொண்டன.

''கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி தோல்வியுறுவதையும், பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதையும் இந்திய முசுலீம்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடுகிறார்கள். அவர்களது தேசபக்தி யோக்கியதைக்கு இதுவே சான்று'' என்பது இந்து மதவெறிக் கும்பலின் பிரபலமான அவதூறுகளில் ஒன்று. இதனால் இந்த கிரிக்கெட் போட்டி தங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இன்னொரு வாய்ப்பாக அமைந்துவிடக்கூடாது எனப் பயந்து போயிருந்த முசுலீம் மக்கள், இந்தப் போட்டியின் பொழுது தங்களின் இந்திய தேச பக்தியை நிரூபிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

சிவசேனாவின் ஆதிக்கமுள்ள மும்பய் நகரில் இந்தியா-பாக். இடையே போட்டி நடந்த அன்று, முசுலீம் கடைகளில் 'தேசிய'க் கொடிகள் பறந்தன; பாகிஸ்தானை இந்தியா வெல்ல

இந்திய அணி பாக். அணியை வெல்ல வேண்டும் என்பதற்காக மும்பயில் முசுலீம்கள் நடத்திய சிறப்புத் தொழுகை.





இந்து மதவெறிக் கும்பல் கலவரம் நடத்திய பெங்களூர் - தேவர ஜீவன ஹள்ளி பகுதி.

வேண்டும் என்பதற்காக ஆசாத் மைதானத்தில் சிறப்புத் தொழுகை நடத்தப்பட்டது. இந்திய முசுலீம் கவுன்சில், ''இந்திய வீரர்களுக்கு முன் கூட்டியே வாழ்த்துச் செய்தி அனுப்புமாறு'' தனது உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டது. இத்துணை செய்த பிறகும் மகாராஷ்டிர மாநில அரசுக்கு முசுலீம்களின் மீதான சந்தேகம் தீரவில்லை; எந்தவொரு முசுலீமாவது பாகிஸ்தானின் மட்டையடியைக் கொண்டாடி, அதனால் 'இந்துக்களின்' மனம் 'புண்பட்டு'விடக் கூடாது என்பதற்காக, முசுலீம் பகுதிகளை போலீசு கண்காணிப்பின் கீழ் கொண்டுவந்தது.

''இந்தியாவில்தான் எல்லாவற்றிலும் அரசியல் புகுந்து நாசப்படுத்துகிறது'' என அலட்டிக் கொள்ளும் நடுத்தர வர்க்கம்தான், குறிப்பாக மேல்சாதி நடுத்தரவர்க்கம்தான், இந்தியா-பாக். போட்டியை விளையாட்டாகப் பார்க்காமல், அதன் மீது தேசிய வெறி - காவிச் சாயத்தைப் பூசுவதில் முன்னணியில் நிற்கிறது. ''திறமைக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டும்'' என்று கூறி இட ஒதுக்கீடு கொள்கையை எதிர்க்கும் இம்மேல் சாதியினரும், இந்து மதவெறி அமைப்புகளும் இந்தியா-பாக் போட்டியில், யார் திறமைசாலிகளோ அவர்கள் வெல்லட்டும் என்று கூறுவதில்லை.

''எல்லை தாண்டிய தீவிரவாதத்தைத் தூண்டும் தீவிரவாத முகாம்களைத் தவிடுபொடியாக்கத் துணியாமல், கிரிக்கெட் வெற்றியை, யுத்த வெற்றியைப் போலக் கொண்டாடுவது கையாலாகாத்தனம்'' என்கிறார் துக்ளக் சோ. ''கிரிக்கெட் தேசபக்தியை வளர்ப்பது சந்தோஷமே. இருப்பினும் கிரிக்கெட் தவிர்த்து அடுத்த இலக்கு நோக்கி நாம் எப்போது முன்னேறப் போகிறோம்'' எனக் கேட்கிறது இந்து முன்னணி அதாவது, ''கிரிக்கெட் முடிந்து விட்டது; போர் எப்போது?'' என்பதுதான் இவர்களின் அங்கலாய்ப்பு.

இப்படிப்பட்ட நிலையில், ''விளையாட்டை விளையாட்டாகப் பாருங்கள்'' எனப் போதிப்பதெல்லாம் இந்து மதவெறிக்குப் பணிந்து போகும், அரசியல் அற்ற வாதமாகும். முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியையும், பாக்.எதிர்ப்பு தேசிய வெறியையும் அம்பலப்படுத்தும் பார்ப்பன - பாசிச எதிர்ப்பு அரசியலை விளையாட்டுத் திடல்களுக்கும் கொண்டு செல்வதுதான், ஆரோக்கியமான விளையாட்டுப் போட்டிகளுக்கு வழி வகுக்கும்!

❑ அழகு

www.padippakam.com

## மைய அரசின் பட்ஜெட்:

# கோவணத்திற்கும் வந்தது ஆபத்து

"சிட்டி பாங்க்" என்ற அமெரிக்க வங்கியின் தலைவர் கடந்த ஆண்டு இந்தியாவிற்கு வந்திருந்த பொழுது, "பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களை வாங்க வக்கில்லாதவனெல்லாம் மக்களில் சேர்த்தி கிடையாது" என்ற பொருள் தரும்படியான வக்கிரமான கருத்தை உதிர்த்துவிட்டுப் போனார். அவரின் வாயில் இருந்து வழிந்த பணக்கார கொழுப்புதான், இந்த ஆண்டிற்கான இந்தியாவின் பட்ஜெட்டாக உருமாறியிருக்கிறது. இதை நாம் இட்டுக் கட்டிக்கூறவில்லை.

"2003-2004-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் சி.ஐ.ஐ. அளித்த அனைத்துப் பரிந்துரைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. உண்மையில் இந்த பட்ஜெட் எங்களின் எதிர்பார்ப்புகளையெல்லாம் மிஞ்சிவிட்டது" என சி.ஐ.ஐ. என்ற தரகு முதலாளிகள் சங்கத்தின் தலைவர் அசோக் சூடா, ஜஸ்வந்த் சிங்கின் பட்ஜெட்டைப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல இந்தப் புகழுரையை எடுத்துக் கொள்ளலாம். இதற்கு மேலும் ஆதாரம் வேண்டும் என்றால், பட்ஜெட்டைக் கூறு போட்டுப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

தஞ்சைப் பகுதி விவசாயிகளிடம் போய், "உங்களுக்கு என்ன தேவை?" என்று கேட்டால், "காவிரியில் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்பார்கள். அதன் பிறகு, "நெல் கொள்முதலை நிறுத்தக் கூடாது; உரமானியத்தைக் குறைக்கக் கூடாது; இலவச மின்சாரத்தை ரத்து செய்யக் கூடாது" எனக் கோருவார்கள். இந்தக் கடைசி மூன்று கோரிக்கைகளை, தஞ்சைப் பகுதி விவசாயிகள் மட்டுமின்றி, இந்திய விவசாயிகள் அனைவருமே கோரிவருகின்றனர். ஆனால், நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங், விவசாயிகளின் தேவைகளுக்கு நேர் எதிராகத் தனது பட்ஜெட்டைத் தயாரித்து, இந்தியாவின் முதுகெலும்பை மீண்டும் பதம் பார்த்திருக்கிறார்.

மைய அரசின் பட்ஜெட்டில் யூரியாவின் விலை (மூட்டை ஒன்றுக்கு) ரூ.12/-ம், பொட்டாஷ் மூட்டையின் விலை ரூ.10/-ம் அதிகரிக்கப்பட்டது. வறட்சியின் காரணமாக விவசாயிகள் நிலத்தடி நீரை எடுத்து விவசாயம் செய்து வரும் இந்த இக்கட்டான நேரத்தில், நீர் இறைக்கும் இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் இலகு ரக டீசல் மீது லிட்டர் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.1.50 ஆயத்தீர்வை விதிக்கப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, பட்ஜெட் வெளியான அன்றே பெட்ரோல், டீசல் விலைகள் லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.50/- உயர்த்தப்பட்டன; அடுத்த பதினைந்து நாட்களில்-மார்ச் 18 அன்று இந்த எரிபொருட்களின் விலைகள் மீண்டும் லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.50 உயர்த்தப்பட்டன. கடந்த பத்தே மாதங்களில், பெட்ரோலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.7.90-ம், டீசலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6.18-ம் அதிகரித்துள்ளன. இது, பட்ஜெட்டுக்கு அப்பாற்பட்டு, பொதுமக்களின்மீது தொடுக்கப்பட்டுள்ள கொடூரத் தாக்குதலாகும்.

இந்தப் பட்ஜெட்டில், விசைத்தறி தொழில் மீது 10 சதவீத ஆயத்தீர்வையும், சமையல் எண்ணெய் மற்றும் வனஸ்பதி மீது 8 சதவீத ஆயத்தீர்வையும் விதிக்கப்பட்டுள்ளது; இதற்கு முன்பிருந்த நிதியமைச்சர்கள் கூட கைவைக்கப் பயந்த சமையல் எண்ணெய் மீது முதன் முறையாகத் தீர்வை வரி விதித்துள்ள ஜஸ்வந்த் சிங்கிற்கு "சீர்திருத்தச் செம்மல்" என்ற பட்டத்தைக் கொடுத்துவிட்டது, இந்தியா டுடே.

மேலும், அரசு மற்றும் தனியார்துறை தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் பொது சேம நல நிதிக்கும், சிறு சேமிப்பில் போடப்படும் பணத்திற்கும் கொடுக்கப்பட்டு வந்த வட்டியில் 1 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இனிமேல் மைய அரசின் வேலைகளில் சேருவோருக்கு ஓய்வூதியம் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. நடுத்தர வர்க்கத்திடம் உள்ள கணினி மோகத்தைக் காசாக்கும் நோக்கத்தோடு, கணினிப் பயிற்சி யைங்கள் அனைத்தும் சேவை வரி விதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருளான சமையல் எண்ணெய் மீது வரி விதித்துள்ள ஜஸ்வந்த் சிங், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மதுபானங்கள் மீது விதிக்கப்படும் சுங்க வரியை 16 சதவீதம் குறைத்திருக்கிறார், குளிர்பானங்கள், குளிர்சாதன இயந்திரங்கள், கார்கள், டயர்கள் ஆகிய ஆடம்பர நுகர் பொருட்களின் மீது விதிக்கப்படும் 32 சதவீத உற்பத்திவரி 24 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சேமநலநிதி, சிறு சேமிப்பிற்குக் கொடுக்கப்பட்டு வந்த வட்டியைக் குறைத்து நடுத்தர மக்களின் தலையில் மிளகாய் அரைத்திருக்கும் நிதி அமைச்சர், பங்கு விற்பனை மூலம் கிடைக்கும் இலாபத்தின் மீது விதிக்கப்படும் ஈவு வரியை அடியோடு நீக்கிவிட்டார். முதலாளித்துவ நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் கம்பெனி வரி மீதான கூடுதல் வரி குறைக்கப்பட்டிருப்பதோடு, முதலீடு செய்து நீண்ட காலம் கழித்துக் கிடைக்கும் இலாபங்களின் மீதான வரி முழுவதும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தேயிலை, காபி, ரப்பர் ஆகிய தோட்டப் பயிர்களின் விற்பனை விலைச் சரிவினைத் தடுக்க, 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி தேயிலை விவசாயியும், கேரள ரப்பர் விவசாயியும் போண்டியாகி நிற்கிறானே என கரிசனத்தால், இந்த 500 கோடி ரூபாய் ஒதுக்கப்படவில்லை. மாறாக, டாடா, இந்துஸ்தான் லீவர் முதலான ஏகபோக முதலாளிகளின் இலாபம் சரிந்துவிடக் கூடாது என்ற வர்க்கப் பாசத்தின் காரணமாக இந்த நிதியை ஒதுக்கியிருக்கிறார், ஜஸ்வந்சிங்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் இந்த பட்ஜெட்டை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் பட்ஜெட் எனப் புகழ்ந்துள்ளன. யாருடைய வளர்ச்சிக்கு என்பதுதான் நமது கேள்வி. நெல்லுக்கும், கரும்புக்கும் போதிய விலை கிடைக்குமா என்பதுதான் விவசாயிகளின் கவலையேயொழிய, பங்குச் சந்தை முதலீட்டுக்கு வரி நீக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதெல்லாம் அவர்களின் பிரச்சினையே அல்ல. காரின் விலையும், குளிர்சாதனத்தின் விலையும் குறைக்கப்பட்டிருப்பதை நடுத்தர வர்க்கம் கூடக் குதித்துக் கொண்டாட முடியாது. பெட்ரோல், டீசல், சமையல் எண்ணெய், சமையல் எரிவாயு - இவற்றின் விலையேற்றமும், மின் கட்டண உயர்வும் அவர்களின் கையைக் கடித்து விடும்.

விவசாயிகள் மத்தியில் எழுந்த எதிர்ப்பையடுத்து, பட்ஜெட்டில் அறிவித்த உரவிலை உயர்வை, மைய அரசு

www.padippakam.com

திரும்பப் பெற்றுக் கொண்டது. இதற்கான அறிவிப்பு வெளிவந்தவுடனேயே, தாராளமயத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் ஒரே குரலின் இந்த மானியங்களினால் தான் பட்ஜெட்டில் பற்றாக்குறை விழுவதாக ஒப்பாரி வைத்தனர்.

இந்த ஆண்டு உரமானியத்திற்கு 13,420 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது அப்படியே விவசாயிகளின் கைகளுக்குப் போவது கிடையாது. இந்த உரமானித்தைச் சிந்தாமல் சிதறாமல் சுருட்டிக் கொள்ளப் போகிறவர்கள் உர ஆலை முதலாளிகள்தான்.

உணவு மானித்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் (27,800 கோடி ரூபாய்) கிட்டதட்ட 45 சதவீதம் இந்திய உணவுக் கிடங்குகளில் 'பதுக்கி' வைக்கப்பட்டிருக்கும் அரிசி, கோதுமை மூட்டைகளைப் பராமரிப்பதற்கே போய்விடும். உணவு மானியத்தின் இன்னொரு பகுதி அரிசி கடத்தும் கும்பலின் கைகளுக்குப் போய் விடும், இதுபோக மிச்சம் மீதி இருப்பதுதான் மக்களுக்கு. சொல்லப் போனால், அரசு தரும் மானியத்தில் வயிறு வளர்ப்பது தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் தானே தவிர, இந்திய விவசாயிகளோ, உழைக்கும் மக்களோ அல்ல!



நுகர்பொருள் கலாச்சாரத்தில் மூழ்கித் திளைக்கும் மேட்டுக்குடியினருக்கு பட்ஜெட் பல சலுகைகளை வாரி இறைத்திருக்கிறது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் வருமான வரி, கம்பெனி வரி, இலாப ஈவு வரி ஆகிய நேரடி வரி விதிப்பில் காட்டப்பட்டுள்ள சலுகைகள் மூலம் அரசுக்கு ஏற்படவுள்ள இழப்பு 2,955 கோடி ரூபாய்; வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மதுபானம் உட்பட ஆடம்பர நுகர் பொருட்களுக்கு விதிக்கப்படும் சுங்கத் தீர்வை 35 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் ஏற்படும் வருமான இழப்பு 2,100 கோடி ரூபாய்; கார், குளிர் சாதன இயந்திரம் உள்ளிட்ட நுகர்பொருட்களுக்கு விதிக்கப்படும் விற்பனைவரி குறைக்கப்பட்டதால் ஏற்படும் வருமான இழப்பு 3200 கோடி ரூபாய். அரசுக்கு வரவேண்டிய இந்த 8255 கோடி ரூபாய் வருமானத்தை அப்படியே சுருட்டிக் கொள்ளப் போகிறவர்கள் தரகு முதலாளிகளும், மேட்டுக்குடி கும்பலும் தான்.

அரசின் இழப்பு, அவர்களுக்கு இலாபம். இந்த இழப்பை ஈடுகட்ட, உழைக்கும் மக்களின் மீது புதிதாக 3,299 கோடி ரூபாய்க்கு வரிகளைச் சுமத்தியிருக்கிறது, மைய அரசு.

இப்படி ஒவ்வொரு பட்ஜெட்டிலும் பல ஆயிரம் கோடி ரூபாய்களைச் சலுகையாகச் சுருட்டிக் கொள்ளும் ஆளும் கும்பல், ரேசன் அரிசிக்கும், மண்ணெண்ணெய்க்கும், உரத்திற்கும், சமையல் எரிவாயுவிற்கும் கொடுக்கப்படும் மானியத்தை ஒட்டு மொத்தமாக வெட்டினால்தான் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும் எனப் போதனை செய்வது அயோக்கியத்தனமானது.

''வரியைக் குறைத்தால் நுகர் பொருட்களின் விலை குறையும்; விலை குறைந்தால் வியாபாரம் அமோகமாக நடக்கும்; வியாபாரம் நடந்தால் உற்பத்தி அதிகரிக்கும்; வேலை வாய்ப்பும் பெருகும்'' என்ற வாதங்களை அடுக்கி தரகு முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் நியாயமானதுதான் என வாதாடுகிறார் ஜஸ்வந்த் சிங். நிதியமைச்சரின் இந்த வாதம், கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் கதையைப் போன்றதுதான்.

கடந்த பத்தாண்டுகளில் பல பத்தாயிரம் கோடி ரூபாய்க்கான வரிச்சலுகைகள் தரகு முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், இதற்கேற்ப தரகு முதலாளிகள் புதிய தொழில்களையோ, வேலை வாய்ப்புகளையோ உருவாக்கவில்லை. 1983 தொடங்கி 1994 வரையிலான பத்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 2.7 சதவீதமாக இருந்த நகர்ப்புற வேலைவாய்ப்பு வளர்ச்சி, அதற்குப் பிந்தைய ஆண்டுகளில் 1.07 சதவீதமாக வீழ்ந்து விட்டது. 1994-க்குப் பிறகு கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு வளர்ச்சி 0.07 சதவீதமாகச் சுருங்கிப் போய்விட்டது.

அரசிடமிருந்து வரிச் சலுகைகளைப் பெறும் முதலாளிகள் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது கிடக்கட்டும். அவர்கள் வரிச்சலுகைகளுக்கு ஏற்ப பொருட்களின் விலையைக் கூடக் குறைப்பதில்லை. இந்த ஆண்டு பட்ஜெட்டில் குளிர்பானங்கள் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரி 8 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப அவற்றின் விலையும் குறைய வேண்டும். ஆனால், இந்தியக் குளிர்பானச் சந்தையைத் தங்களின் பிடியில் வைத்திருக்கும் பெப்சியும், கோக்கும் குளிர்பானங்களின் விலையைக் குறைக்க முடியாது எனத் தடாலடியாக அறிவித்திருப்பதோடு, வரியை இன்னமும் குறைக்க வேண்டும் என்ற ஆலோசனையை முன் வைத்துள்ளன.

இப்படியே போனால், ''நீங்களா பார்த்து ஏதாவது போடுங்கய்யா'' என்று இந்திய அரசு முதலாளிகளிடம் தட்டேந்த வேண்டியதுதான். அப்படிபட்ட நிலையை முதலாளிகள் ஏற்கனவே சட்டவிரோதமாக உருவாக்கியும் விட்டார்கள். கடந்த பத்தாண்டுகளில் தரகு முதலாளிகள் இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி மட்டும் 1 இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டி விட்டது. இந்திய அரசு முதலாளிகளின் கழுத்தில் துண்டைப் போட்டு இந்த வரிபாக்கியை வசூலித்தால், பட்ஜெட்டில் பற்றாக்குறையும் விழாது; மக்களின் மீது புதிது புதிதாக வரிபோட வேண்டிய அவசியமும் இருக்காது!

தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள இந்த வரிச்சலுகைகள் ஒருபுறமிருக்க, உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுக்கு இணங்க மறுகாலனியத் தாக்குதலையும் தீவிரப்படுத்தி இருக்கிறார், ஜஸ்வந்த் சிங்.

தனியார் வங்கிகளில் அந்நிய முதலீடு 49 சதவீதம் தான் இருக்க வேண்டும் என்ற வரம்பு மேலும் தளர்த்தப்பட்டு, 74 சதவீத அந்நிய முதலீட்டிற்கு அனு

www.padippakam.com

மதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் வங்கிகளும் அரசு வங்கிகளும் ஒன்றையொன்றை இணைத்துக் கொள்வதற்கு இருந்து வந்த தடையும் நீக்கப்பட்டுவிட்டது.

இலாப மீட்டும் பொதுத்துறை நிறுவனங்களைத் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் விற்கும் இலக்கு 13,000 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அந்நியப் பொருட்களின் தாராள இறக்குமதிக்கு வசதியாக சுங்கவரி 35 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதோடு, சிறு தொழில் நிறுவனப் பட்டியலில் இருந்து 75 தொழில்கள் நீக்கப்பட்டு விட்டன.

சுங்க வரியிலும், சிறு தொழில் பட்டியலிலும் கொண்டு வரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள், சிறுதொழில் மீது தொடுக்கப்பட்டுள்ள இரட்டைத் தாக்குதலாகும். சிறு தொழில்கள், ஒருபுறம், இறக்குமதியாகும் அந்நியப் பொருட்களோடு போட்டி போட வேண்டும்; இன்னொரு புறம், சிறு தொழிலில் நுழையவுள்ள பெரிய நிறுவனங்களோடும் போட்டியிட வேண்டும். இதனால், சிறுதொழில்களின் அழிவு மேலும் துரிதமாகி, நகர்ப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதையும் விட அதிகமாகும். மேலும், சுங்கவரி குறைக்கப்பட்டுள்ளதால், தாராள இறக்குமதி அதிகமாகி, அந்நியப் பொருட்களின் குப்பைத் தொட்டியாக இந்தியா முழுமையாக மாறிவிடும்.

தாராளமயத்தைத் தொடங்கிவைத்த காங்கிரசு தொடங்கி 'இடதுசாரி'கள் வரை, எல்லா வண்ண எதிர்க் கட்சிகளும் இந்த பட்ஜெட்டை விமர்சித்துள்ளன. இக் கட்சிகளின் விமர்சனங்கள் அனைத்தும், மக்களுக்குக் கொஞ்சம் சலுகைகளை வழங்கிவிட்டு, இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்பதைத் தாண்டிச் செல்லவில்லை.

மக்களுக்குத் தேவை சலுகைகள் அல்ல; இலவச மின்சாரம் ரத்து, நெல் கொள்முதல் ரத்து, மானியம் வெட்டு, பொதுத்துறை விற்பனை என நாட்டை மறுகாலனியாக்கும் தாராளமயப் பொருளாதாரக் கொள்கை அடியோடு கைவிடப்பட வேண்டும் என்பதுதான் அவர்களின் தேவை. இந்தக் கோரிக்கையை முன்வைக்காத விமர்சனங்கள் அனைத்தும் மேம்போக்கானவை; மலட்டுத்தனமானவை; ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்திற்காகக் கூறப்படுபவை!

❑ செல்வம்

# அமெரிக்க "அம்பி" இந்தியனாம்! வங்கதேச முசலீம் அந்நியனாம்!

ஊருக்கெல்லாம் சமாதானத்தையும், அகிம்சையையும் போதிக்கும் இந்தியா, கடந்த சனவரி மாத இறுதியில் தனது சிறிய அண்டை நாடான வங்க தேசத்துடன் ஒரு சிறிய இராணுவ மோதலை நடத்துவதற்குத் தயாரானது. இந்த மோதல் சூழலுக்கு, வங்க தேசத்தில் இருந்து வரும் எல்லை தாண்டிய ஊடுருவல்தான் காரணம் என்று விளக்கமும் அளித்தது, இந்திய அரசு.

கடந்த சனவரி மாதம் 30ஆம் தேதி, வங்க தேசத்தைச் சேர்ந்த 68 ஆண்கள், 65 பெண்கள், 80 குழந்தைகள் உள்ளிட்ட 213 பேர், ஒரே குழுவாக, வங்க தேசத்தில் உள்ள முன்சிகஞ்ச் கிராமத் திருவிழாவில் கலந்து கொண்டு விட்டு, தலைநகர் டாக்காவிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களை மாடு திருடும் கும்பல் எனச் சந்தேகப்பட்ட கோகபுரி கிராமத்தினர், குழந்தைகளைக் கூட விட்டுவிடாமல் அவர்கள் அனைவரையும் பிடித்து, வங்கதேச எல்லை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

வங்கதேச எல்லை பாதுகாப்புப் படை அவர்களை, இந்தியாவில் இருந்து வங்கதேசத்துக்குள் நுழைய முயலும் மேற்கவங்க முசுலீம்கள் என முத்திரை குத்தியது. அக்குழுவினர் டாக்காவில் வசித்து வருவதற்கான ஆதாரங்களைக் காட்டிய பின்னரும் கூட, வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படை அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. மேலும், அவர்களைத் துப்பாக்கி முனையில் இந்திய எல்லையை நோக்கி துரத்தியடித்தது.

இந்திய எல்லை பாதுகாப்புப் படையோ, அவர்களை இந்திய - வங்க தேச எல்லைகளுக்கு இடையில் உள்ள ஆளில்லாப் பகுதியில், துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்திவிட்டது. உள்துறை அமைச்சர் அத்வானி உடனடியாக, "வங்கதேசத்தில் இருந்து வரும் எல்லை தாண்டிய ஊடுருவலின் சமீபத்திய உதாரணம் இது. அந்த ஊடுருவல்காரர்களை வெளியே தூக்கியெறிவோம்" என ஆவேசமாக அறிக்கை விட்டார்.

இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை எழுந்தது.

இந்திய மற்றும் வங்கதேச எல்லை படைகளால் அலைக்கழிக்கப்பட்ட வங்கதேச முசுலீம் பாம்பாட்டி குழுவைச் சேர்ந்த பெண் உணவு கேட்டுக் கதறும் பரிதாபம்.




படிப்பகம்

www.padippakam.com

வங்கதேச எல்லையையொட்டி மேற்கு வங்கத்தில் அமைந்துள்ள சட்காச்சி கிராமப் பகுதியில் எல்லை பாதுகாப்புப் படை குவிக்கப்பட்டது. இதேபோல், எல்லையின் மறுபக்கம் வங்கதேசத்தின் எல்லை பாதுகாப்புப் படை குவிக்கப்பட்டது. எல்லையின் இருபுறமும் அமைந்துள்ள கிராமங்கள் கூண்டோடு காலி செய்யப்பட்டன. இரு நாட்டுப் படைகள் இடையே துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த மோதல் நிலை சனவரி இறுதியல் தொடங்கி பிப்ரவரி முதல்வாரம் வரை நீடித்தது. அந்த ஒரு வாரம் முழுவதும், இரு நாட்டு துணை இராணுவப் படைகளும், குழந்தைகள் மீது கூட இரக்கம் காட்டாமல், அவர்களைத் துப்பாக்கி முனையில் அங்கும் இங்குமாக அலைக்கழித்தன. இறுதியில், வங்கதேசப் படை, அவர்களை இரவோடு இரவாக தன் நாட்டிற்குள் நுழைய அனுமதித்த பின்னர்தான், இந்த முறுகல் நிலை தளர்ந்தது.

இந்திய அரசு, குறிப்பாக துணைப் பிரதமர் அத்வானி இந்தப் பிரச்சினையை, ஏதோ பயங்கரவாதப் பிரச்சினை போல ஊதிப் பெருக்கினார். உண்மையில், இந்த 213 பேரில், ஒருவர் கூட முசுலீம் பயங்கரவாதியோ, தீவிரவாதியோ அல்ல. அவர்கள் பரம்பரை பாம்பாட்டிகள். பாம்பைப் பிடித்து, பழக்கி, வித்தை காட்டும் நாடோடிகள். அவர்கள் முசுலீம்களாக இருந்தாலும் கூட, தங்களின் குலத் தொழில் காரணமாக ''இந்து'' மதச் சடங்குகளிலும் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் டாக்காவில் வசித்தாலும் கூட, ஊர்ஊராகச் சென்று வித்தை காட்டி, அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வயிற்றைக் கழுவும் பரம ஏழைகள்.

அந்த ஒரு வாரம் முழுவதும், அவர்களுக்கு வானம் தான் கூரை. பகலில் அடித்த வெயிலில் வாடி வதங்கினார்கள்; இரவில் குளிரில் நடுங்கிச் செத்தார்கள். நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிய ரெஜினா பீபீயின் இரண்டு மாத கைக் குழந்தையை, 'பிளாஸ்டிக் ஷீட்டில்' சுற்றி வைத்து கடுங்குளிரில் இருந்து பாதுகாத்தனர். வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்படவில்லை.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் அவர்களுக்கு உணவு கொடுக்க முன்வந்ததை, வங்கதேச எல்லை பாதுகாப்புப் படை தடுத்துவிட்டது. அதேசமயம், இந்திய எல்லை பாதுகாப்புப் படையோ அவர்களின் அவலநிலையைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டது. துப்பாக்கி முனையில் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கிவிட்டு, தனது மனிதாபிமானத்தைத் தம்பட்டம் அடித்துக் கொண்டது. இரு நாட்டு அரசுகளும் தங்களின் 'தேச' பக்தியைக் காட்டிக் கொள்ளுவதற்கு, அந்த அப்பாவி ஏழைகளைப் பகடைக் காயாக்கிக் கொண்டன.

வங்க தேசத்தில் இந்தியாவின் ஆதரவாளரான ஷேக் ஹசீனாவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு, கலீதா ஜுயா ஆட்சியைப் பிடித்ததில் இருந்தே, பா.ஜ.க. கூட்டணி அட்சி அந்நாட்டின் மீது வெறுப்புப் பிரச்சாரத்தைக் கக்கி வருகிறது. ''அல்-கொய்தா முசுலீம் தீவிரவாதிகளுக்கும், வடக்கிழக்கிந்திய தீவிரவாத அமைப்புகளுக்கும் வங்கதேச அரசு தளம் அமைத்துக் கொடுப்பதாகவும்; வங்கதேசத்தில் உள்ள பாக். தூதரகம், பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் மையமாகச் செயல்படுவதாகவும்'' மைய அரசு வங்கதேசம் மீது குற்றச் சாட்டுக்களை அள்ளி வீசியிருக்கிறது.

மேலும், இந்து மதவெறிக் கும்பல் தனது முசுலீம் எதிர்ப்பு அரசியலுக்கு ஏற்றபடி, ''இந்தியாவில் 1.5 கோடி வங்கதேச முசுலீம்கள் சட்ட விரோதமாகக் குடியேறித் தங்கியிருக்கின்றனர்; இந்த எல்லை தாண்டிய ஊடுருவலால் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து. இந்த ஊடுருவல்காரர்களை இந்தியாவில் இருந்து தூக்கியெறிய வேண்டும்'' என்ற பிரச்சாரத்தையும் நடத்திவருகிறது. உள்ளூர் முசுலீமை நாட்டின் எதிரியாகப் பார்க்காத 'இந்துக்களிடம்,' இந்த 'அந்நிய' முசுலீம்களைத் தேசிய ஒருமைப்பாட்டின் எதிரியாகக் காட்டி, இந்து மதவெறியைத் தூண்டிவிடுகிறது, சங்கப் பரிவாரம்.

இன்றைய வங்கதேசத்தில் இருந்து முசுலீம்கள் வெளியேறி இந்தியாவில் குடியேறுவது, அந்நாடு பாகிஸ்தானில் இருந்து பிரிவதற்கு முன்பே, 1970 களிலேயே தொடங்கிவிட்டது. பாகிஸ்தானைப் பிளக்க வேண்டும் என்ற இந்திய அரசின் நோக்கத்திற்காகவே, அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் இருந்து இலட்சக்கணக்கான முசுலீம்கள், இந்தியாவில் அகதிகளாகக் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

தில்லி, மும்பய், கல்கத்தா ஆகிய நகரங்களிலும், மேற்கு வங்கம், பீகார், அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலும் குடியேறியிருக்கும் பல இலட்சம் வங்கதேச முசுலீம்கள் இரண்டு தலைமுறைகளாக இந்தியாவில் வசித்து வருகின்றனர். தொழிற்சாலைகளில் கூலிகளாக, பஞ்சாப் கோதுமைப் பண்ணைகளில் பண்ணையாட்களாக, பணக்கார வீடுகளில் வேலைக்காரர்களாக எனப் பலதரப்பட்ட கூலி வேலைகளில் இம்முசுலீம்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய முதலாளிகளும், பணக்கார விவசாயிகளும் குறைந்த கூலிக்கு வங்கதேச முசுலீம்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டனர் என்றால், காங்கிரசு கட்சி அவர்களைத் தனது நம்பகமான ஓட்டு வங்கியாகப் பயன்படுத்திக் கொண்டது. இதற்காகவே, இம்முசுலீம்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டன; குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டன.

வங்கதேசப் பெண்களை ஏலத்தில் எடுத்து, அவர்களை 'மனைவி'யாக்கிக் கொண்டு, அதன் பின் அப்பெண்களைக் கூலியில்லா நிரந்தரக் கொத்தடிமைகளாக்கிக் கொள்ளும் பழக்கம் பஞ்சாப், ஜம்மு-காசுமீர் மாநிலங்களில் காணப்படுவதை போலீசு அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர். வங்கதேசப் பெண்களைக் கடத்திச் சென்று பாகிஸ்தானில் விற்பதற்கான வழித்தடமாகவும் இந்தியா மாறியிருக்கிறது.

இளமையான வங்கதேசப் பெண்களை ஒரு இலட்ச ரூபாய்க்குள் இந்தியா-பாகிஸ்தான் சந்தைகளில் விலைக்கு வாங்க முடியும். கராச்சியில் உள்ள பெண்கள் காப்பகத்தில் அடைக்கலமாயிருக்கும் அன்வாரி பேகம் பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் வழியாக பாகிஸ்தானின் பஞ்சாப்புக்குக் கடத்தப்பட்டார். அன்று அன்வாரி பேகத்துடன் 50 வங்கதேசப் பெண்கள் பாகிஸ்தானில் ஏலம் விடப்பட்டுள்ளனர்.

இப்படி வங்கதேசத்தின் வறுமை, இந்திய முதலாளிகளுக்கு மலிவான கூலியுழைப்பாய் பயன்படுகிறது; கடத்தல் கும்பலுக்கு உணர்ச்சிகளற்ற வெறும் சதைப் பிண்டமாய்ப் பயன்படுகிறது. போலீசுக்கு, அதிகார வர்க்கத்துக்கும் இலஞ்சமாகவும், ஓட்டுக் கட்சிகளுக்கு வாக்கு வங்கியாகவும், அரசியல் சதுரங்கத்தில் பகடைக் காயாகவும் பயன்படுகிறது.

கடந்த முப்பதாண்டு கால இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் வங்கதேச முசுலீம் அகதிகளுக்கும் ஒரு பங்கு உண்டு. ஆனால், இந்து மதவெறிக் கும்பலோ கொஞ்சம் கூட நன்றியில்லாமல், இம்முசுலீம்களை இந்தியாவின் எதிரிகளாகக் காட்டுகிறது. பிழைப்பு தேடி இந்தியாவுக்கு வரும்/வந்துள்ள


படிப்பகம்

www.padippakam.com

முசுலீம்களை எல்லை தாண்டிய ஊடுருவல்காரர்கள் என முத்திரை குத்தி, பயங்கரவாதப் பீதியூட்டுகிறது.



வங்கதேச முசுலீம் பெண்கள் கைது செய்யப்பட்டு ஹௌரா நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்: வேலை தேடி இந்தியாவிற்கு வந்தால் கிடைப்பதோ சிறைதண்டனை

இந்தியாவில் இந்து மத வெறிக் கும்பல் அதிகாரத்துக்கு வந்துவிட்டதால் தற்பொழுது வங்கதேச முசுலீம்கள் இந்தியாவை விட, பாகிஸ்தானில் வேலை தேடிக் கொள்ளுவதைப் பாதுகாப்பானதாகப் பார்க்கிறார்கள். ஆனால், அவர்கள் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும் என்றால், இந்தியாவைக் கடந்துதான் செல்ல வேண்டும். இது, உயிரையே பணயம் வைக்கிற பயணமாகும்.

எல்லையில் ரோந்து சுற்றும் இராணுவத்தின் கண்களில் பட்டு விடாமல்; எல்லையில் புதைக்கப் பட்டுள்ள கண்ணி வெடிகளை மிதித்துச் சிதறிச் செத்துவிடாமல், மின் வேலியில் உடம்புபட்டு கருகிப் போகாமல் பாகிஸ்தானுக்குள் நுழைவது என்பது மறுபிறப்பு எடுப்பதற்குச் சமமாகும். ஆனால், எல்லையைத் தாண்டும் வங்க தேச முசுலீம்களுக்கு எந்நேரமும் 'அதிருஷ்டம்' கைகொடுப்பதில்லை.

கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் நுழைய முயன்ற ஐந்து வங்கதேச முசுலீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்து போனவர்களிடம் ரூ. 1,000/- பணம் இருந்தது. இது அவர்களுக்குக் கிடைத்த கூலியில் மிச்சம் பிடித்த பணமாக இருக்கலாம். ஆனால், அந்தப் பணம் பாகிஸ்தான் ரூபாயாக இருந்ததால், அவர்கள் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் நுழைய முயன்றதால், அந்தப் பிணங்கள் எல்லை தாண்டிய பயங்கரவாதிகளின் பிணங்களாகக் காட்டப்பட்டன.

***

**தா**ராளமயத்தின் பின் ஏழை நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழில்வளமிக்க பணக்கார நாடுகளுக்கு வேலை தேடி இரகசியமாகச் செல்வது அதிகரித்த அளவில் நடைபெற்று வருகிறது. இந்தியாவைச் சேர்ந்த நடுத்தர வர்க்க 'இந்துக்களும்' சீக்கியர்களும் கூட, கள்ளத் தோணி ஏறி இங்கிலாந்துக்கும், ஜெர்மனிக்கும், அமெரிக்காவுக்கும் இரகசியமாகச் சென்று, சட்டவிரோதமாகக் குடியேறி வேலை பார்த்து வருகின்றனர்.

சமூக ஆய்வாளர்கள், பணக்கார நாடுகளில் சட்டவிரோதமாகக் குடியேறி வேலைபார்க்கும் ஏழை நாட்டுத் தொழிலாளர்களை ''பொருளாதார அகதிகள்'' என்று அழைக்க வேண்டும் எனக் கூறுகிறார்கள். ஏழை நாடான வங்க தேசத்தில் இருந்து இந்தியாவிற்குள் நுழையும் முசுலீம்களையும் பொருளாதார அகதிகளாகத்தான் பார்க்க வேண்டும். ஆனால், பார்ப்பன பாசிஸ்டுகளோ அவர்களை ''ஊடுருவல்காரர்கள்'' என அவமானப் படுத்துவதோடு, அடக்குமுறைகளையும் ஏவி விட்டு ஒடுக்கி வருகின்றனர். அதே சமயம், வங்க தேசத்தில் இருந்து வரும் இந்துக்களுக்கும், புத்த மதத்தைச் சேர்ந்த ''சக்மா'' பழங்குடியினருக்கும் அகதிகள் அந்தஸ்து வழங்குவோம் என அறிவித்து, நாட்டின் வெளியுறவுக் கொள்கையையும் இந்துத்துவா கொள்கையாக மாற்றிவிட்டனர்.

ஈழத் தமிழர்களை நமது சொந்த சகோதரர்களாக பார்ப்பதைப் போலத்தான் வங்கதேச முசுலீம்களையும் பார்க்க முடியும். ஏனென்றால், ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் வங்காளம், ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளால், மத அடிப்படையில் மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என இரண்டு கூறாகப் பிரிக்கப்பட்டது. ஆனால், வங்காளிகளின் ஓட்டை வாங்கி அதிகாரத்தில் உட்கார்ந்திருக்கும் போலி கம்யூனிஸ்டுகளோ, இந்தப் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் கூடப் பார்க்காமல், இந்து மதவெறியர்களைப் போல, சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள வங்க தேச முசுலீம்களைத் துரத்தியடிக்க வேண்டும் எனக் கூச்சல் போடுகிறார்கள்.

உலகமயத்தின் கீழ் தனியார் மூலதனம் எல்லை தாண்டி வரவும், ஓடவும் உரிமை பெற்றிருக்கும் பொழுது, தொழிலாளர்கள் மட்டும் ஏன் எல்லையைத் தாண்டக் கூடாது? அமெரிக்காவில் வாழும் ''அம்பி''களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க இந்தியா தயாராக இருக்கும் பொழுது, இந்த நாட்டில் குடியேறி உழைத்து வரும் வங்கதேச முசுலீம்களுக்குக் குடியுரிமை வழங்கினால் என்ன குடிமுழுகிப் போய்விடும்?

எனவே, பத்து-இருபது ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் குடியேறி வாழ்ந்து வரும் வங்கதேச முசுலீம் குடும்பங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே குடும்ப அட்டைகள் பெற்றுவிட்ட, வாக்காளர் பட்டியலில் பெயரைப் பதிவு செய்துவிட்ட முசுலீம் குடும்பங்களை நாட்டைவிட்டு வெளியேற்ற முயன்று வரும் இந்து மதவெறிக் கும்பலின் சதி நிறுத்தப்பட வேண்டும். வேலை தேடி இந்தியாவிற்கு வந்து போகும் வங்கதேச முசுலீம்களுக்கு வேலைக்கான அனுமதி சான்றுகள் வழங்கப்பட வேண்டும் - என்பதுதான் இப்பிரச்சினைக்கு நியாயமான, ஜனநாயகப் பூர்வமான தீர்வாகும். இதற்கு மாறாக, ''எல்லை தாண்டிய ஊடுருவல்'' எனப் பீதியூட்டுவதும், இதைத் தடுக்க பொடாவைப் போல ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதும் பார்ப்பன பாசிச அரசியலின் ஒரு பகுதியாகும்!

❑ சுப்பு



படிப்பகம்

www.padippakam.com



## இஸ்ரேலின் இனவெறியில் பரிதவிக்கும் பாலஸ்தீனம்

கடந்த பிப்ரவரியில் ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர் அச்சுறுத்தலை எதிர்த்து உலகம் தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த வேளையில், இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதலால் பாலஸ்தீனம் குருதிச் சேற்றில் புதைந்து கொண்டிருந்தது. கடந்த பிப்ரவரி மாதத்தின் முதல் இரு வாரங்களில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய இராணுவத்தால் கோரமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முன்னணியாளர்களைக் குறிவைத்து வேட்டையாடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், தற்கொலைப்படை தாக்குதல்களை முறியடிக்கவும் இத்தகைய வேட்டையை நடத்துவதாக அது நியாயம் கற்பிக்கிறது. சந்தேகிக்கப்படும் எவரையும் கைது செய்து வதைப்பது, பொய்க்குற்றம் சாட்டி பாலஸ்தீன விடுதலை இயக்க முன்னணியாளர்களைக் கொன்றொழிப்பது, அப்பாவி சிவிலியன்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி நரவேட்டையாடுவது என்பதாக அதன் அட்டூழியங்கள் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன.

கடந்த பிப்ரவரி 17-ஆம் நாளன்று ஹமாஸ் குழுவின் முன்னணியாளரான அபு சயீத் தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, ஒரு காய்கறி சரக்கு வண்டியில் மறைந்திருந்த இஸ்ரேலிய இராணுவம் பட்டப்பகலில் நட்டநடு வீதியில் அவரைக் கோரமாகச் சுட்டுக் கொன்றது. அதற்கு முதல் நாளன்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி (DFLP) யின் முக்கிய பிரமுகரான தய்சீர்கலீல் என்பவரைச் சுட்டுக் கொன்றது. அவரைக் கைது செய்வதை எதிர்த்து பாலஸ்தீனியர்கள் போராடியபோது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 4 பேரைச் சுட்டுக் கொன்று பலரைப் படுகாயப்படுத்தியது. பாலஸ்தீன சுயாட்சி பகுதியில் உள்ள ஒரு உலோக குறுந்தொழிலகத்தை இஸ்ரேலிய இராணுவம் குண்டு வீச்சு தாக்குதல் நடத்தி அழித்தது. இங்கு இரகசியமாக துப்பாக்கி ரவைகளும் வெடிகுண்டுகளும் தயாரிக்கப்படுவதாக பொய்க்குற்றம் சாட்டி இத்தாக்குதலை அது நியாயப்படுத்தியது. இத்திடீர்த் தாக்குதலில் 5 அப்பாவி பாலஸ்தீன சிவிலியன்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். நேப்ளஸ் நகரில் வீடு வீடாகச் சோதனை நடத்திய இஸ்ரேலிய இராணுவம், ஹமாஸ் குழுவைச் சேர்ந்த படைவீரர்கள் இருவரை ஓடவிட்டு கொடூரமாக சுட்டுக் கொன்றது.

இத்தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதைக் கூட இஸ்ரேலிய இராணுவம் தடுத்து, சுட்டுக் கொல்கிறது. கடந்த பிப்ரவரி 18 அன்று, நேப்ளஸ் நகரில் ஒரு மருத்துவர் நடுவீதியிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். ஆன்னே கவுன்னீ என்ற 65 வயதான மருத்துவத்தாதி ஆம்புலன்ஸ் வண்டியில் சிகிச்சையளிக்கச் சென்று கொண்டிருந்தபோது, இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி, அவரைக் கொன்றதோடு, வாகன ஓட்டியைப் படுகாயப்படுத்தியது. சோதனைச் சாவடிகளில் உத்தரவுக்குப் பணியவில்லை என்று கூறி ஒரு முதியவருடன் வந்த இளஞ்சிறுவனை இஸ்ரேலிய காட்டு மிராண்டிகள் சுட்டுக் கொன்றனர். இஸ்ரேலிய கவசவண்டி மீது கல்லெறிந்த குற்றத்துக்காக ஒரு பாலஸ்தீன சிறுவன் கோரமாக சுட்டுக் கொல்லப்பட்டான்.

இஸ்ரேலில் இவ்வாண்டில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதால், பயங்கரவாத பீதியூட்டி மக்களை இனவெறியூட்டி அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்துடன் பாலஸ்தீனத்தில் கொலை வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளே கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் ஐ.நா.மன்றமோ ஆழ்ந்த கவலை தெரிவித்ததற்குமேல், இக்கொலை வெறியாட்டங்களைக் கண்டிக்கவோ, தடுக்கவோ முன்வரவில்லை. உலக நாடுகளின் மெத்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் பாலஸ்தீன மக்களைக் கேள்வி முறையின்றி ஒடுக்கி வருகின்றனர். ஆனால், அரசு பயங்கரவாத அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ள இஸ்ரேலிய இனவெறி காட்டுமிராண்டிகள் அதன் எதிர்விளைவுகளைச் சந்திக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை.

## குஜராத்: பார்ப்பன பாசிச 'நீதி'!

ஆயிரத்துக்கும் மேற்பட்ட முசுலிம்களைப் படுகொலை செய்து, ஏறத்தாழ 1.5 இலட்சம் முசுலீம்களைச் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கி குஜராத்தில் இந்துவெறி பயங்கரவாதிகள் நடத்திய வன்முறைத் தாக்குதல் ஓய்ந்து ஓராண்டாகி விட்டது. குஜராத் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாகவும் அமைதி நிலவுவதாகவும் இந்துவெறி ஆட்சியாளர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால், இன்னும் பல்லாயிரக்கணக்கான முசுலீம்கள் தாங்கள் எப்போது கொல்லப்படுவோமோ என்ற மரண பீதியில் அஞ்சி நடுங்குகின்றனர்.

குஜராத்தின் தாகோடு மாவட்டம், ரந்திகாபூர் கிராமத்தைச் சேர்ந்தவர் நூர்ஜஹான். இந்துவெறி பயங்கரவாதிகள் அவர் மீது பாலியல் வன்புணர்ச்சிக் கொடூரத்தை ஏவியதோடு, அவர் குடும்பத்தைச் சேர்ந்த 14 பேரை வெட்டிக் கொன்றனர். அவரது கணவர் இத்தாக்குதலின்போது வயலில் விவசாய வேலைக்குச் சென்றதால் உயிர் பிழைத்தார். அகதி முகாமில் தஞ்சமடைந்த அத்தம்பதிகள், பின்னர் போலீசாரிடம் இந்துவெறி பயங்கரவாதிகள் மீது புகார் கொடுத்து சாட்சியமளித்தனர். ஆனாலும் குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. இக்கொலைகாரர்கள் சுதந்திரமாக உலாவி வருவதோடு, நூர்ஜஹான் தலைக்கு ரூ 5. இலட்சம் விலை வைத்துள்ளனர். மரணத்தின் நிழல் தன்னைத் தொடர்வதைக் கண்டு பீதியுற்ற நூர்ஜஹான், தனது குடும்பத்துடன் வெவ்வேறு ஊர்களில் தங்கி கொலைகாரர்களிடமிருந்து தப்பித்து வருகிறார்.

அகதி முகாம்கள்தான் முசுலீம்களுக்கு நிரந்தரக் குடியிருப்பா? இந்துவெறி பயங்கரவாதிகளுக்கு தண்டனை எங்கே?





படிப்பகம்

www.padippakam.com



போலீசாரோ, போதிய ஆதாரம் இல்லை என்று கூறி நூர்ஜஹானின் புகாரைக் குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டனர். ஆனால் மனித உரிமை அமைப்புகள் போலீசின் மோசடியை அம்பலப்படுத்தி, தமது தரப்பில் சாட்சியங்களையும் ஆதாரங்களையும் சேகரித்துக் கொடுத்துள்ளன. இருப்பினும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீதான வழக்குகளுக்கு, நூர்ஜஹான் விவகாரம் சான்று கூறப் போதுமானது. இந்து வெறியர்களின் கொலைவெறி அச்சுறுத்தல் காரணமாக பல்லாயிரக்கணக்கான முசுலீம்கள் புகார் கொடுக்க முன்வரவில்லை. மொத்தத்தில் 4252 புகார்களே போலீசில் பதிவாகியுள்ளன. அவற்றில், ஏறத்தாழ பாதியளவு புகார்களை ஆதாரமற்றது என்று போலீசு ரத்து செய்து விட்டது. 2014 புகார்களுக்கு மட்டுமே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம் இருந்த போதிலும் போலீசாரால் பல புகார்கள் ரத்து செய்யப்பட்டன. பல குற்றப்பத்திரிகைகளில் குற்றவாளிகள் பெயர்கள் குறிப்பிடப்படாமல் பொதுவில் வன்முறை கும்பல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேசமயம் சாட்சியளித்தவர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி, முந்தைய ஆண்டுகளில் நடந்த ஏதாவது ஒரு குற்ற வழக்கில் சேர்த்து போலீசார் அவர்களைச் சிறையிலடைத்துள்ளனர். இந்துவெறி பயங்கரவாதிகள் முசுலீம் குடியிருப்புகளைத் தீவைத்து கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டபோது, சிதறியோடிய மக்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர்கள் கலவரத்தில் ஈடுபட்டதாக சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். குற்றவாளிகளான இந்துவெறி குண்டர்கள் சுதந்திரமாகத் திரியும் போது, அவர்கள் தப்பியோடி விட்டதாக போலீசு குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்தது. இத்தனை வஞ்சக சதிகளையும் மீறி வழக்குகள் விசாரணைக்கு வந்தாலும் நீதிமன்றம் அவற்றை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்வதுமில்லை. பஞ்ச்மஹால் மாவட்டத்தில் மிகப் பெரிய அளவுக்கு இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதல் நடந்துள்ள போதிலும், அம்மாவட்டத்திலிருந்து இதுவரை 26 வழக்குகள் மீது மட்டுமே நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

இந்த மோசடிகளும் அநீதிகளும் தொடரும் அதே வேளையில், கோத்ரா ரயில் பெட்டி எரிப்பைக் காரணம் காட்டி 123 முசுலீம்கள் மீது ''பொடா'' சட்டத்தை ஏவி சிறையிலடைத்துள்ளது மோடி அரசு. கோத்ரா ரயில் பெட்டியில் எரிந்து மாண்டவர்கள் 59 பேர். கைதானவர்களோ 123 பேர். கோத்ராவைத் தொடர்ந்து இந்து வெறியர்கள் கட்டவிழ்த்து விட்ட பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்ட முசுலீம்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகம். ஆனால் கைது செய்யப்பட்ட இந்துவெறியர்கள் எவரும் கிடையாது. இதுதான் இராம இராஜ்ஜியத்தின் 'நீதி'!

## திரிசூலம்: அடையாளமா? ஆயுதமா?

குஜராத்தைச் சோதனைச் சாலையாக்கி வெற்றி கண்ட இந்துவெறி பயங்கரவாதிகள் அடுத்து இராஜஸ்தானைக் குறிவைத்து தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர். குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படுகொலைகள் மற்றும் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து கடந்த 6 மாத காலமாக ஆயுதம் வழங்கும் நிகழ்ச்சிகளை விசுவ இந்து பரிஷத் தொடர்ச்சியாக இராஜஸ்தானில் நடத்தி வருகிறது. கடந்த அக்டோபரிலிருந்து மார்ச் வரை ஏறத்தாழ 6000 பேருக்கு திரிசூல ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் 35 நிகழ்ச்சிகளில் 2600 பேருக்கு ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் மேலும் 5000 பேருக்கு ஆயுதம் வழங்கும் நிகழ்ச்சிகளை நடத்த வி.இ.ப.திட்டமிட்டுள்ளது.

முன்பெல்லாம் சிறுபான்மையினர் நிறைந்துள்ள நகரங்களில் மட்டும் இத்தகைய திரிசூல ஆயுதம் வழங்கும் நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. ஆனால் இப்போது மாநிலம் முழுவதும் எல்லா பகுதிகளிலும் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்தி வி.இ.ப. இந்துவெறியூட்டி வருகிறது. இவ்வாண்டுக்குள் மேலும் 3 இலட்சம் பேருக்கு ஆயுதம் வழங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. இவ்வாண்டில் நடைபெற உள்ள மாநில சட்டமன்றத் தேர்தல் மற்றும் அயோத்தி விவகாரத்தைக் கருத்தில் கொண்டு இந்துவெறியூட்டும் நோக்கத்துடனேயே ஆயுதம் வழங்கும் நிகழ்ச்சிகளை வி.இ.ப. திட்டமிட்டு நடத்தி வருகிறது.

சீக்கியர்கள் தமது மத வழக்கத்தின்படி கத்தி வைத்துக் கொள்வதைப் போல, இந்துக்கள் தமது மத அடையாளமாக திரிசூலத்தை வைத்துக் கொள்ளவே இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதாக இந்துவெறியர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்து கோயில்களில் காணப்படும் திரிசூலம் போன்றதல்ல, வி.இ.ப. விநியோகிக்கும் திரிசூலம். வி.இ.ப.வின் திரிசூலத்தின் நடுவிலுள்ள முனை ஈட்டி போல நீண்டதாக கூர்மையாக்கப்பட்டுள்ளது. இருபுறமும் உள்ள இரும்புத் தகடுகள் நன்கு வளைக்கப்பட்டு கத்திபோல் தீட்டப்பட்டுள்ளன. ஆயுத தடைச் சட்டத்தின்படி, கூர்மையான கத்தி முனைகள் 10.5 செ.மீ நீளமுடையதாக இருந்தால் அது பயங்கர கொலைக் கருவியாகும். வி.இ.ப. விநியோகிக்கும் திரிசூலங்கள் 13.5 செ.மீ நீளமுடைய கத்திகளைக் கொண்டுள்ளது. ஆனால், கத்தியின் கூர்மையாக்கப்பட்ட பகுதியின் நீளம் 8 செ.மீ மட்டுமே உள்ளதாகக் காட்டி, இது பயங்கர ஆயுதமல்ல என்று வி.இ.ப வாதிடுகிறது. இராஜஸ்தான் அரசும் அதற்கு ஆமாம் சாமி போட்டு கைகட்டி நிற்கிறது. ஆனால், வி.இ.ப. விநியோகிக்கும் திரிசூலத்தை எந்தவொரு சாணை பிடிப்பவரிடமும் கொடுத்து, எவரும் எளிதாக அதன் கத்திகளை நீளமாக தீட்டிக் கொள்ள முடியும். கொலைக் கருவியாக ஏந்தவும் முடியும். 1999 முதல் 2002 வரையிலான நான்காண்டு காலத்தில் இராஜஸ்தானில் சிறியதும் பெரியதுமான இந்து மதவெறித் தாக்குதல் - கலவரங்களில் இத்திரிசூலங்கள் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று அரசின் போலீசு அறிக்கையே ஒப்புக் கொண்டுள்ளது. ஆனாலும் ஆளும் காங்கிரசு ஆட்சியாளர்கள், இந்து ஓட்டுகள் பறிபோய் விடுமோ என்ற பீதியில் பயங்கரவாத விசுவ இந்து





படிப்பகம்

www.padippakam.com



பரிசத்தையோ அதன் திரிசூலங்களையோ தடை செய்யத் திராணியின்றி, இந்துவெறி பயங்கரவாதிகளின் ஆட்டத்துக்குத் தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

## ம.பி.யில் ஒரு அயோத்தி

அயோத்தி பாபர் மசூதியில் திருட்டுத்தனமாக இராமன் சிலையை வைத்துவிட்டு, பின்னர் வழிபாட்டு உரிமை கோரியதோடு நாடெங்கும் இரத்த யாத்திரை நடத்தி, இறுதியில் மசூதியையே இடித்துத் தரைமட்டமாக்கிய இந்து வெறியர்கள், இப்போது அதே உத்தியுடன் ம.பி.யிலுள்ள போஜ்சாலாவிலும் வழிபாட்டு உரிமை கோரி கலவரத் தீயை மூட்டி வருகின்றனர்.

ம.பி.யின் இந்தூர் மாவட்டத்திலுள்ள தர் நகரில் ராஜாபோஜ் என்னும் மன்னரால் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு கல்விக் கூடம் போஜ்சாலா எனறழைக்கப்பட்டது. அதையொட்டி, இசுலாமிய சுபி முனிவரான கமால் மௌலானா சிஷ்டியின் தர்கா 16-ஆம் நூற்றாண்டில் கட்டியமைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் நடந்த ஆக்கிரமிப்பு படையெடுப்புகளால் போஜ்சாலாவின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. இவற்றைக் காட்டி முசுலிம் மன்னர்கள் படையெடுத்து போஜ்சாலாவை இடித்துவிட்டு தர்காவைக் கட்டியுள்ளார்கள் என்று கட்டுக்கதையை அவிழ்த்துவிட்டு நீண்ட காலமாக இந்து வெறியர்கள் போஜ்சாலாவை ஆக்கிரமிக்க கலவரங்களைத் தூண்டி வந்துள்ளனர்.

ஆனால் போஜ்சாலாவை இடித்துவிட்டு தர்கா கட்டப்பட்டதாக இந்துவெறியர்கள் அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைக்கு வரலாற்றில் எந்த ஆதாரமுமில்லை. மேலும், அன்றைய தர் மன்னனின் அனுமதியோடு போஜ்சாலாவில் முசுலீம்கள் வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து வழிபாடும் நடத்தி வந்துள்ளனர். அதேபோல, பார்ப்பனர்களும் மேல்சாதியினரும் வசந்த பஞ்சமி நாளில் சரசுவதி வழிபாடும் நடத்தி வந்துள்ளனர்.


ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பு, "போஜ்சாலா என்பது இந்துக்களின் கல்விக் கடவுளான சரசுவதியின் கோயில்; அதை முசுலீம்கள் சிதைத்து மசூதியாக்கி விட்டனர்; எனவே, முசுலீம்களின் வழிபாட்டு உரிமையை ரத்து செய்து தர்காவை அகற்ற வேண்டும்; இந்துக்களின் வழிபாட்டு உரிமையை நிலைநாட்டி, கோயிலை மீட்க வேண்டும்" என்று இந்துவெறியர்கள் கலவரத்தில் இறங்கினர். அதைத் தொடர்ந்து 1952-இல் இந்திய தொல்லியல் துறையின் பொறுப்பில் போஜ்சாலா வந்தது. பின்னர் 1984-லிலும் 1994-லிலும் இந்துவெறியர்கள் கலவரத்தில் இறங்கினர். 1995-இல் செவ்வாய் கிழமைகளில் போஜ்சாலாவில் பூசைகள் செய்யக் கிளம்பினர். இதனால் மதவெறிக் கலரவத்துக்கான பதற்றம் தீவிரமாகியது. 1998-இல் இந்திய தொல்லியல் துறை போஜ்சாலாவை மூடிவிட்டு, முசுலீம்கள் வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு நடத்தவும், இந்துக்கள் வசந்த பஞ்சமி நாளில் (ஆண்டுக்கொரு முறை) வழிபாடு நடத்தவும் மட்டும் அனுமதித்தது.

இதை எதிர்த்து அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்த இந்துவெறியர்கள், கடந்த ஆண்டில் "இந்து ஜாக்ரன் மன்ச்" எனும் அமைப்பை நிறுவி ஊர்வலங்களும் மறியல் போராட்டங்களையும் நடத்தி கலவரத் தீயை பற்ற வைக்க முயற்சித்தனர். "போஜ்சாலாவில் சரசுவதி சிலையும் கருவறையும் இருந்தது; முசுலீம் ஆக்கிரமிப்பாளர்கள் கருவறையை இடித்து நாசப்படுத்தி தர்காவை கட்டிவிட்டனர்; சரசுவதி சிலையை வெள்ளையர் ஆட்சிக்கால கவர்னர் ஜெனரலான கர்சன் எடுத்துச் சென்று இலண்டன் அருங்காட்சியகத்தில் வைத்துவிட்டார்" என்று கட்டுக்கதையை அவிழ்த்துவிட்டு வெறியூட்டினர். ஆனால் போஜ்சாலாவில் சரசுவதி சிலையோ, கோயிலோ இருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று முன்னாள் தொல்லியல் துறை துணை இயக்குனரான ராம் சொரூப் கார்க் மறுத்துள்ளார். மேலும் அன்றைய வெள்ளைக்கார கவர்னர் எடுத்துச் சென்ற சிலை, போஜ்சாலாவிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டதுமல்ல. அது ராஜ்பரா கட்டிடத்தைப் புதுப்பித்தபோது கண்டெடுக்கப்பட்ட சிலையாகும்.

இருப்பினும், ம.பி.யில் சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால் இந்துவெறியூட்டி அரசியல் இலாபம் தேடும் நோக்கத்தோடு ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் தடையை மீறி போஜ்சாலாவை கைப்பற்றப் போவதாக அறிவித்தன. இந்துவெறி அமைச்சர் உமாபாரதியும், தொகாடியாவும் ஆத்திரமூட்டும் பிரச்சாரங்களை நடத்தினர். இதனால் இந்து ஓட்டுகள் பறிபோய் விடுமோ என்ற பீதியில் ம.பி.யை ஆளும் காங்கிரசு ஆட்சியாளர்கள், விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் உத்தியோடு, செவ்வாய் கிழமைகளில் இந்துக்கள் இரண்டு மணி நேரத்துக்கு போஜ்சாலாவில் வழிபாடு நடத்த அனுமதியளித்தனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு எல்லா நாட்களிலும் கட்டுப்பாடு ஏதுமின்றி வழிபாடு நடத்த அனுமதி கோரி இந்துவெறியர்கள் கலகம் செய்தனர்.

இதைக் காட்டி, வகுப்புக் கலவரங்கள் மூளாமல் தடுக்கவும் தற்காலிக ஏற்பாடாகவும் செவ்வாய் கிழமைகளில் காலை முதல் மாலை வரை இந்துக்கள் போஜ்சாலாவில் வழிபாடு நடத்தலாம் என்று இந்திய தொல்லியல் துறை அனுமதியளித்துள்ளது. ம.பி. தேர்தலைக் குறிவைத்து இந்துவெறி மைய அரசு, தொல்லியல் துறையைக் கொண்டு இந்துவெறியர்களுக்குச் சாதகமாகச் செய்துள்ள முடிவுதான் இது. ஆண்டுக்கு ஒரு முறை வசந்த பஞ்சமி நாளில் வழிபாடு நடத்த அனுமதி பெற்றிருந்த இந்து வெறியர்கள், இப்போது வாரம் ஒருமுறை வழிபாடு நடத்த உரிமை பெற்றுள்ளார்கள். இதைச் சாதகமாக்கிக் கொண்டு எல்லா நாட்களிலும் வழிபாட்டு உரிமைக்காகவும், கோயிலாக மாற்றவும், தர்காவை இடிக்கவும் அவர்கள் அடுத்தகட்ட தாக்குதல்களைத் தொடர்வார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ❑

போஜ்சாலா: வெடிக்கக் காத்திருக்கும் குண்டு.



www.padippakam.com

## இரத்தக் காடாக வயநாடு:

# நிலத்தைப் பறித்தவர்கள் உயிரையும் பறிக்கிறார்கள்

**போர்! இது ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் உலக மேலாதிக்கப் போர் அல்ல. கடந்த பிப்ரவரி 19-ஆம் நாளன்று கேரள போலீசார் முத்தங்கா வனப்பகுதியில், அம்மண்ணின் மைந்தர்களான பழங்குடியின மக்கள் மீது நடத்திய காட்டு மிராண்டித்தனமான போர்!**

ஜாலியன்வாலாபாக்கில் நடந்ததைப் போல நாற்புறமும் போலீசார் சூழ்ந்து கொண்டு வெறிபிடித்தாற்போல் பழங்குடியினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் - என எவருமே போலீசாரின் தாக்குதலிலிருந்து தப்பமுடியவில்லை. கர்ப்பிணிப் பெண்களைக் கூட போலீசு மிருகங்கள் பூட்சு காலால் எட்டி உதைத்து அடித்து நொறுக்கின. பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளைத் தாயிடமிருந்து பிடுங்கி போலீசு வெறியர்கள் காட்டுப் புதர்களில் வீசியெறிந்தனர். பழங்குடியினரின் குடிசைகள் - அவர்களது துணிமணிகள் - உடமைகளோடு சேர்த்து தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பண்ட பாத்திரங்கள் உடைத்து நொறுக்கப்பட்டன. 450 பழங்குடியின குடும்பங்கள் மீது 800-க்கும் மேற்பட்ட போலீசார் சூழ்ந்து கொண்டு நடத்திய இந்த நரவேட்டையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். பிப்ரவரி 19-ஆம் நாளன்று முத்தங்கா வனப்பகுதி எங்கும் இரத்த ஆறு ஓடியது; பிணவாடை வீசியது.

எதற்காக இந்தப் போர்? ஏன் இந்த நரவேட்டை? பழங்குடியின மக்கள் என்ன குற்றம் செய்தார்கள்?

* * *

கேரளத்தில் வடக்கே கர்நாடகத்தை ஒட்டியுள்ள வயநாடு மாவட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் உள்ளனர். குரிச்சியர், குருமார், அடியார், காட்டு நாயக்கர் முதலான பல பிரிவினரான இவர்களில் 80,000 பேர் நிலமற்றவர்கள். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வரை இவர்களுக்கு நிலம் சொந்தமாக இருந்துள்ளது. 1947-க்குப் பிறகு, பழங்குடியினரல்லாதோர் காட்டுப் பகுதிகளில் குடியேறி, பழங்குடியினரை சாராய போதைக்கு அடிமையாக்கி - கடனாளியாக்கி, அதற்கீடாக நிலங்களைப் பறித்துக் கொண்டனர். இன்னும் சில பழங்குடியினர் இட்லிக்கும் தோசைக்கும் பிட்டுக்கும் கூட தமது நிலங்களைப் பறிகொடுத்துள்ளனர். குடியேறியவர்கள் இன்று தோட்டத் தொழிலதிபர்களாகவும், எஸ்டேட் முதலாளிகளாகவும் உயர்ந்து விட்டார்கள். வஞ்சிக்கப்பட்ட பழங்குடியினர் தமது சொந்த மண்ணிலேயே அடிமைகளானார்கள்.

பழங்குடியினரது சிறியதும் பெரியதுமான போராட்டங்களுக்குப் பிறகு, 1973-இல் அச்சுதானந்த மேனன் தலைமையிலான 'இடதுசாரி' அரசு, 1960 முதலாக பழங்குடியினர் நிலத்தை குடியேறியவர்கள் கையகப்படுத்துவதைத் தடைசெய்யும் சட்டத்தை இயற்றியது. ஆனால் அச்சட்டம் காகிதச் சட்டமாகவே முடங்கிப் போனது. அடுத்து வந்த காங்கிரசு அரசும் அச்சட்டத்தைச் செயல்படுத்தவில்லை. காரணம், பழங்குடியினரிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றியவர்கள் தமது சாதி - அரசியல் செல்வாக்கைக் கொண்டு இச்சட்டத்தை முடக்கினர். அவர்களது ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க காங்கிரசு மற்றும் 'இடதுசாரி' அரசுகள் இச்சட்டத்தைக் கிடப்பில் போட்டன. அதன் பிறகு, 1982-இல் மீண்டும் இச்சட்டம் தூசிதட்டி எடுக்கப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டது. 1960-முதல் என்றிருந்ததை 1982-க்குப் பிறகு குடியேறியவர்கள் பழங்குடியினரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட நிலங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்று அறிவிக்கப்பட்டது.

1993-இல் டாக்டர் நல்ல தம்பி தேரா என்ற இயற்கை ஆர்வலர், முந்தைய சட்டத்தைச் செயல்படுத்தக் கோரி உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்தார். அதைத் தொடர்ந்து, சட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துமாறு நீதிமன்றம் கேரள அரசுக்கு உத்தரவிட்டது. ஆனாலும் அன்றைய காங்கிரசு கூட்டணி அரசு அதைச் செயல்படுத்தவில்லை.

அதன் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, 1996-இல் ஆட்சிப் பொறுப்பிலிருந்த 'இடது முன்னணி' அரசு பழைய சட்டத்தில் மீண்டும் திருத்தம் செய்தது. இச்சட்டம் அரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகச் சென்றபோது, அன்று அரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன் இச்சட்டம் ஆதிவாசிகளுக்கு எதிரானது என்று கையெழுத்திடாமல் திருப்பி அனுப்பினார்.

பின்னர், 1999-இல் ஒரு திருத்தப்பட்ட சட்டம் இயற்றினர். ஆதிவாசிகளின் நிலத்தை இரண்டு ஹெக்டேருக்குமேல் ஆக்கிரமித்திருந்தால், அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்று அதில்

போர்க்களமான முத்தங்கா வனப்பகுதி: போலீசு அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் மண்ணின் மைந்தர்கள்.



www.padippakam.com

திருத்தம் செய்யப்பட்டது. அச்சட்டத்துக்கு அரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்தது. இருப்பினும் இச்சட்டத்தை எதிர்த்து பழங்குடியினரும் குடியேறியவர்களும் வழக்குகள் தொடுத்ததால், இச்சட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மொத்தத்தில் பழங்குடியினரின் நிலத்தை ஆக்கிரமித்தவர்களுக்கு சட்டரீதியாக பாதுகாப்பு அளித்து, நிலத்தைப் பறிகொடுத்த பழங்குடியினருக்கு ஏதாவது பிச்சை போடுவதே ஆட்சியாளர்களின் நோக்கமாக இருந்தது.



கொடூர சித்திரவதைக்குப் பின் கைது செய்யப்பட்ட வீராங்கனை ஜானு மற்றும் கீதானந்தன்.

இந்த அநீதியை எதிர்த்து தமது வாழ்வுரிமைக்காக பழங்குடியினர் போராட்டங்களைத் தொடர்ந்தனர். பழங்குடியினப் பெண்மணியான சி.கே.ஜானு என்பவர் அப்போராட்டங்களைத் தலைமையேற்று வழிநடத்தியதோடு, பழங்குடியினரை ''ஆதிவாசி கோத்ர மகாசபை'' எனும் அமைப்பின் கீழ் அணிதிரட்டினார். சராசரி பழங்குடியினப் பெண்ணாக இருந்த ஜானு, அறிவொளி இயக்கத்தின் மூலம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்றும், தனது சொந்த நடைமுறை அனுபவத்தாலும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எல்லையற்ற உணர்வினாலும் அவர் படிப்படியாக பழங்குடி மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவியாக உயர்ந்தார். அவருடன் முன்னாள் அரசு உயரதிகாரியும் முன்னாள் நக்சல்பாரி இயக்க ஆதரவாளருமான கீதானந்தன் என்பவர் இணைந்து பழங்குடியினரின் போராட்டத்துக்கு வழிகாட்டி உதவினார். இவர்களது தலைமையில் நடத்தப்பட்ட பல்வேறு நிலமீட்சிப் போராட்டங்கள் வெற்றியைச் சாதித்தன.

2001- ஆம் ஆண்டு ஆகஸ்ட் இறுதியில் ஜானுவின் தலைமையில் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் திரண்டு, திருவனந்தபுரம் அரசு தலைமைச் செயலகம் மற்றும் காங்கிரசு முதல்வர் ஏ.கே.அந்தோணியின் வீட்டின் முன்பாக கொட்டகை போட்டு தங்களுக்கு நிலம் வழங்கக் கோரி போராட்டத்தைத் தொடர்ந்தனர். பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நடுவே அரைப் பட்டினியுடன் அவர்கள் தொடர்ந்து 47 நாட்கள் போராடிய பிறகு, அரசு பேச்சுவார்த்தைக்கு இறங்கி வந்தது. 2002 டிசம்பர் இறுதிக்குள் நிலமற்ற அனைத்து பழங்குடி குடும்பங்களுக்கும் குறைந்த பட்சம் ஒரு ஏக்கர் முதல் அதிகபட்சம் 5 ஏக்கர் நிலம் தருவதாக அரசு உறுதியளித்து ஒப்பந்தம் போட்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை அந்தோணி அரசு காற்றிலே பறக்கவிட்டது.

தாங்கள் மீண்டும் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு குமுறிய பழங்குடி மக்கள், ஜானுவின் தலைமையில் 2003 ஜனவரி 4-ஆம் தேதியன்று வயநாடு மாவட்டம் சுல்தான் பத்தேரி வட்டத்திலுள்ள முத்தங்கா வனப்பகுதியில் குடியேறி குடிசைகளைப் போட்டனர். ஏறத்தாழ 450 குடும்பங்கள் கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து இவ்வனப்பகுதியில் ''இந்த நிலம் எங்களுடையது'' என்று காட்டு நிலத்தை உழுது பக்குவப்படுத்தத் தொடங்கினர். அன்னியர்கள் எவரும் உள்ளே நுழையக் கூடாது என்று காவல் சாவடிகளையும் அமைத்தனர். ஏறத்தாழ 40 நாட்களுக்கு மேலாகியும் அரசிடமிருந்து இச்செயலுக்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை.

பிப்ரவரி 17-ம் நாளன்று காட்டின் ஒரு பகுதியில் தீ பிடித்தபோது, அதை அணைக்கச் சென்ற வன அதிகாரிகள் உட்பட 21 பேரை, அத்துமீறி தமது காட்டிற்குள் வந்துவிட்டதாக பழங்குடியினர் பிடித்து வைத்துக் கொண்டனர். மறுநாள், மாவட்ட ஆட்சியர் நேரில் வந்து பேச்சு வார்த்தை நடத்திய பிறகு அவர்களை விடுவித்தனர். அடுத்த நாள் 800-க்கும் மேற்பட்ட போலீசார் சூழ்ந்து கொண்டு, பழங்குடியினர் காட்டுப் பகுதியை ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றம் சாட்டி அவர்களை அடித்து நொறுக்கினர். தற்காப்புக்காக பழங்குடியினர் வில் - அம்புகளுடனும் மூங்கில் கொம்புகளுடன் போரிட்டனர். போலீசார் கண்ணீர்புகை குண்டுகளை வீசியதும் பழங்குடியினர் காட்டினுள் தப்பியோடி தீவைத்து பாதுகாப்பு வளையம் அமைத்தனர். பின்வாங்கிய போலீசுப்படை சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பழங்குடியினரைத் தேடியது. அதில் ஒரு குழு, பழங்குடியினரைக் கண்டதும் துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப் படுத்தியது. சிதறி ஓடிய பழங்குடியினர் மூன்று போலீசுக்காரன்களைப் பிடித்து தாக்கி ஒரு குடிசையில் அடைத்து வைத்துக் கொண்டு போலீசுக்கு தகவல் கொடுத்தனர். படுகாயமடைந்த பழங்குடியினருக்கு மருத்துவ உதவி செய்தால்தான் பிணைக் கைதியாக உள்ள போலீசாரை விடுவிப்போம் என்று எச்சரித்தனர்.

தமது கூட்டாளிகளை மீட்க பேச்சு வார்த்தை நாடகமாடிய போலீசார், மறுபுறம் கண்ணனூர் ஆயுதப்படை போலீசுத் தலைவரான சுரேஷ் புரோகித் என்பவன் தலைமையில் பெரும் படையாக திடீர் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். இரத்தப் பசி கொண்ட போலீசு மிருகங்கள் கண்மூடித்தனமாக பழங்குடியினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். தமது சகோதரர்கள் துடிக்கத் துடிக்க கொல்லப்படுவதைக் கண்டு வெகுண்ட ஆதிவாசி ஒருவர், பிடித்து வைத்திருந்த போலீசுக்காரன்களை அரிவாளால் வெட்டினார். அவரையும் போலீசு சுட்டுக் கொன்றது. படுகாயமடைந்த போலீசுக்காரன்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது ஒருவன் இறந்து போனான்.

அடுத்த சில மணி நேரங்களில் வெளிச்சத்திற்காக ''ஜெனரேட்டர்கள்'' கொண்டுவரப்பட்டு வனாந்திரம் முழுவதும் அங்குலம் அங்குலமாக அலசப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்கள் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு, தப்பியோடி பதுங்கியிருந்த பழங்குடியினர் அடித்து நொறுக்கப்பட்டனர். கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பழங்குடியினர் கைது செய்யப்பட்டனர். ஆதிவாசி கோத்ர மகாசபை தலைவர்களான ஜானுவும் கீதானந்தனும் கைது செய்யப்பட்டு கொடூர சித்திரவதைகளுக்குப் பிறகு பல்வேறு குற்ற வழக்குகளின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர். நூற்றுக்கும் மேலானோர் மருத்துவ மனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் நூற்றுக்கும் மேலானோர் 'காணாமல்' போயுள்ளனர். ஏறத்தாழ 150 பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாகவும் அவர்களைக் குழிவெட்டிப் புதைத்தால் பின்னர் அம்பலமாகிவிடும்

www.padippakam.com

...பதால் டன் கணக்கில் சர்க்கரை மாங்கி சடலங்களைப் போலீசாரே எரித்துள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன.

தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், வன்முறையாளர்கள் என்று சித்தரிக்கப்படும் இப்பழங்குடியினருக்கு இன்று நிலமில்லை; வீடு இல்லை; சோறாக்க பாத்திரமில்லை; மாற்றுத் துணிமணியுமில்லை. இந்த நூற்றாண்டில் இப்படியொரு பயங்கரவாத அடக்குமுறை பழங்குடியினர் மீது ஏவப்பட்டது மில்லை. மண்ணின் மைந்தர்களான அவர்கள் இன்று ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் காட்டு வளத்தையும் சுற்றுச் சூழலையும் நாசப்படுத்தி விட்டார்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறார்கள். ஆனால் பழங்குடியின மக்களை வேட்டையாடியபோது, போலீசாருக்கு சுடச்சுட பிரியாணியும், பெப்சியும் குடுவைக் குடிநீரும் வழங்கப்பட்டு, வேட்டைக்குப் பின் அவர்கள் வீசியெறிந்து விட்டுச் சென்ற பிளாஸ்டிக் கழிவுகளால் இந்த வனப்பகுதியே இன்று நாசமாக்கப்பட்டுக் கிடக்கிறது.

வயநாடு பழங்குடி மக்கள் மீதுதான் இத்தகைய அட்டூழியங்களும் அடக்குமுறையும் ஏவப்பட்டுள்ளதா? இல்லை. தெற்கே வயநாடு தொடங்கி வடக்கே உ.பி.வரை இலட்சக்கணக்கான பழங்குடியின மக்கள் தமது மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளார்கள். 1951 முதல் 1990 வரை 2 கோடியே 13 லட்சம் மக்கள் 'வளர்ச்சித் திட்டங்களுக்காக' காட்டுப்புற பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளதாக திட்டக் கமிஷனே கூறுகிறது.

பழங்குடியினரின் நிலங்களைப் பறித்து ஒட்டாண்டிகளாக்கிவிட்டு, தரகுப் பெருமுதலாளிகளும், எஸ்டேட் அதிபர்களும் காட்டு வளத்தைச் சூறையாட சட்டபூர்வமாக அனுமதிப்பதுதான் இன்றைய துரோக ஆட்சியாளர்களின் அகராதியில் 'வளர்ச்சித் திட்டங்கள்' என்றழைக்கப்படுகிறது. நர்மதை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் சர்தார் சரோவர் அணைக்கட்டு திட்டம் பல்லாயிரக்கணக்கான பழங்குடியின மக்களின் வாழ்வுரிமையைப் பறித்தது. ஒரிசாவின் ரயாகடாவில் அலுமினிய ஆலைக்காகவும், சட்டீஸ்கரில் எஃகு ஆலைக்காகவும் நிலமும் வாழ்வும் பறிக்கப்பட்ட பழங்குடியினர் பத்தாயிரம் பேர். நாடெங்கும் வனவிலங்கு சரணாலயங்கள் அமைக்கவும் தேசிய வனப்பூங்காக்களை நிறுவவும் விரட்டியடிக்கப்பட்ட பழங்குடியினர் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர். பழங்குடியினரின் நலனுக்காகவே உருவாக்கப்பட்டதாக சித்தரிக்கப்படும் ஜார்கந்து மாநிலத்தில் சுபர்ண ரேகா அணைக்கட்டு திட்டத்திற்காக இன்று 5000 பழங்குடியின குடும்பங்கள் கிராமங்களிலிருந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ளன.

குறிப்பாக, தனியார் மயம் - தாராளமயம் எனும் மறுகாலனியாதிக்கத் தாக்குதலைத் தீவிரப்படுத்தி வரும் இந்துவெறி கூட்டணி அரசு பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்களை காடுகளிலிருந்து விரட்டியடிப்பதில் முனைப்பாக இறங்கியுள்ளது. உச்சநீதி மன்றமும் சுற்றுலா-வனத்துறை அமைச்சகமும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை உள்ளடக்கி, 12.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு காட்டுப் பகுதிகளைக் கையகப்படுத்தவும் சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்களை - அதாவது பழங்குடியினரை வெளியேற்றவும் உத்தரவிட்டுள்ளது. 2001 செப்டம்பரில் போடப்பட்ட இந்த உத்தரவை 2003 மே 1-ஆம் தேதிக்குள் செயல்படுத்துமாறு ஆணையிட்டுள்ளது. இதைக் கண்காணிக்க ஒரு மைய அதிகாரக் குழு நிறுவப்பட்டு, அது மாநில அரசுகளுக்கு காட்டுப் பகுதிகளை இனங்காட்டி உத்தரவிட்டு, செயல்படுத்த இறங்கியுள்ளது. இதனடிப்படையில்தான் வயநாடு வனப் பகுதியிலிருந்து நரவேட்டையாடப்பட்டு பழங்குடியினர் விரட்டியடிக்கப்படுகிறார்கள். மே.வங்கத்தின் சுந்தரவனப் பகுதியிலுள்ள ஜம்பு தீவிலிருந்து, பாரம்பரியமாக மீன்பிடித்து வந்த 20,000-க்கும் மேற்பட்ட சந்தால் பழங்குடி மக்களை மார்ச் 31-க்குள் வெளியேற்றுமாறு மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. காடுகள், மலைகள், ஆறுகள், கடற்கரைப் பகுதிகளை தனியார் - அந்நிய முதலாளிகளுக்குத் தாரைவார்க்கும் நோக்கத்தோடுதான் இத்தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.



அடக்குமுறையால் துவண்டுபோன பழங்குடியினக் குடும்பத்தைக் கைது செய்யும் போலீசு.

இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு, வயநாட்டில் பழங்குடியினர் மீதான அடக்குமுறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் - மறியல் போராட்டங்களில் இறங்கி, ஆளும் காங்கிரசு அரசைப் பணியவைத்து அரசியல் ஆதாயம் தேடுவதில் எதிர்க் கட்சிகள் குறியாக உள்ளன. இத்தனை காலமும் பழங்குடியினரை வஞ்சித்த இத்துரோகிகளுக்கு, தாங்கள் ஆளும் மாநிலங்களில் போட்டி போட்டுக் கொண்டு மறுகாலனியாதிக்கக் கொள்கையைச் செயல்படுத்திவரும் இக்கயவாளிகளுக்கு, அடக்குமுறையை எதிர்த்து முதலைக் கண்ணீர் வடிக்கக் கூட அருகதை கிடையாது.

வனப்பகுதியிலிருந்து பழங்குடியினர் விரட்டப்படுகிறார்கள்; கடற்கரையிலிருந்து மீனவர்கள் துரத்தப்படுகிறார்கள்; விளைநிலங்களிலிருந்து விவசாயிகள் பிய்த்தெறியப்படுகிறார்கள்; ஆலைகளிலிருந்து தொழிலாளர்கள் வீசியெறியப்படுகிறார்கள்; நெசவாளர்கள் கஞ்சித் தொட்டிக்குத் தள்ளப்படுகிறார்கள்; வேலையில்லை; கூலியில்லை; வாழும் உரிமையும் இல்லை. ''இல்லை'' என்று சொல்வதற்குக் கூட உரிமையில்லை.

உழைக்கும் மக்களின் கோரிக்கைகள் வேறுபட்டவைதான்; ஆனால் அவற்றை மறுக்கின்ற மறுகாலனியாதிக்கக் கொள்கை ஒன்று. மக்கள் பறிகொடுத்த உரிமைகள் வேறுவேறாக இருந்தாலும் பறித்துக் கொண்ட அரசு ஒன்றுதான். போராட்டங்களை நசுக்கும் போலீசும் ஒன்றுதான். எதிரிகள் ஓரணியில் நிற்கும் போது உழைக்கும் மக்களாகிய நாம் இனியும் வெவ்வேறு அணிகளாகப் பிரிந்திருப்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

பழங்குடியினர் போராட்டமும் மீனவர்களின் போராட்டமும் தொழிலாளர் போராட்டமும் மாணவர் போராட்டமும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக ஓரணியில் திரண்டெழட்டும்; துரோக ஆட்சியாளர்கள் திக்கெட்டும் சிதறி ஓடட்டும். நமது மண்ணும் மலையும் நிலமும் நதியும் காடும் கழனியும் மக்கள் வசம் கை மாறட்டும்!

**தகவல்: இசக்கிமுத்து,**
வண்டிப்பெரியார் (கேரளா).


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்திய இராணுவத்தில் பாகிஸ்தான் உளவாளிகள்

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 63 அதிகாரிகள் பாகிஸ்தான் அரசுக்கு உளவு பார்த்து வந்த இரகசியம் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்கு விசாரணை நடந்து வருகிறது. இந்த 63 பேரில், 17 பேர் பிடிபடும் முன்பே, இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர்; மீதி 46 பேரும் பணியில் இருக்கும் பொழுதே கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். முசுலீம் தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யுடன் தொடர்பு வைத்திருப்பதைக் காட்டி, முசுலீம்கள் அனைவரையும் பாகிஸ்தான் உளவாளிகள் என இந்து மதவெறிக்கும்பல் முத்திரை குத்துகிறது. அவர்களின் நியாயத்தை இதற்குப் பொருத்தினால், இந்திய இராணுவத்தையே பாகிஸ்தானின் உளவுக் கூடாரம் என்றுதான் கூற வேண்டியிருக்கும்.

## மோடியின் அடுத்த குறி கிறித்தவர்களா?

குஜராத் மாநில உளவுத்துறை போலீசார் அம்மாநில கிறித்தவர்களைப் பற்றி கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி வருகின்றனர். இக்கணக்கெடுப்பின் பொழுது, "நீங்கள் எவ்வளவு காலமாக கிறித்தவர்களாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு வருமானம் வரும் வழி என்ன?" என்பது உள்ளிட்டுப் பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. கிறித்தவர்களை மட்டும் குறிவைத்து நடத்தப்படும் இக்கணக்கெடுப்பை கிறித்தவ அமைப்புகள் மட்டுமின்றி, பல்வேறு மனித உரிமை மற்றும் தன்னார்வ அமைப்புகளும் எதிர்த்து வருகின்றன. குஜராத்தில் நடந்த இனப்படுகொலையின் பொழுது, ரேசன் கார்டுகளையும், வாக்காளர் பட்டியலையும் வைத்துக் கொண்டு முசுலீம்களைத் தாக்கிய இந்து மத வெறியர்கள், அடுத்ததாக கிறித்தவர்களைத் தாக்க இந்தக் கணக்கெடுப்பைப் பயன்படுத்திக் கொள்வர் என அவ்வமைப்புகள் இந்த இரகசிய கணக்கெடுப்புப் பற்றிச் சந்தேகப்படுகின்றன.

## ஓநாய்களிடம் நீதி கிடைக்குமா?

"பத்திரிகையாளர் பாதுகாப்புக் குழு" எனும் அமைப்பு குஜராத்தில் நடந்த இனப்படுகொலை பற்றி, அதில் பாதிக்கப்பட்டவர்களை உரையாட வைத்து, "வேதனையின் குரல்" எனும் ஆவணப்படத்தைத் தயாரித்து இருக்கிறது. இந்த ஆவணப் படம் அரசாங்கத்தையும் போலீசையும் மோசமாகச் சித்தரிக்கிறது; இந்தப் படத்தை வெளியிட்டால் மீண்டும் மதக் கலவரம் வெடிக்கும்" என்ற காரணங்களை அடுக்கி, தணிக்கைவாரியம் தணிக்கைச் சான்றிதழ் தர மறுத்துவிட்டது. படத்தின் தயாரிப்பாளர்கள் இத்தடையை நீக்கக் கோரி, தணிக்கை வாரியத்தின் மறு ஆய்வுக் குழுவை அணுகினார்கள். படத்தைப் பார்த்த மறுஆய்வுக் குழு உடனடியாக எந்த முடிவும் சொல்ல முடியாது எனக் கூறி, தணிக்கைக் குழு விதித்தத் தடைக்கு ஒத்து ஊதிவிட்டது. இனப்படுகொலையை நடத்திய கொலைகாரர்களைப் பாதுகாக்கும் சட்டம், அப்படுகொலையைக் கண்டிக்கும் படத்தைத் தடை செய்யும் என்றால், அத்தடையை மீறி படத்தைத் திரையிடுவதைத் தவிர வேறு வழியில்லை!

கழிவு நீருக்குக் காத்திருக்கும் குடங்கள்.



## தடையின்றித் தொடரும் தீண்டாமைதாக்குதல்கள்

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டத்திலுள்ள புள்ளம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் பாண்டி. தாழ்த்தப்பட்டவரான பாண்டி, சாதிக் கட்டுமானத்தை மீறி அக்கிராமத்திலுள்ள 'பொது' மந்தையில் உட்கார்ந்து ஓய்வெடுத்திருக்கிறார். இதைப் பார்த்து விட்ட சாதிக் கொழுப்பெடுத்த சில மேல்சாதி வெறியர்கள், மந்தையில் உட்கார்ந்திருந்த பாண்டியை மிரட்டி, அங்கிருந்து துரத்தியடித்தனர். பாண்டியின் தந்தை பூவண்ணன் இந்தச் சம்பவத்தை "நடந்தது நடந்து போச்சு" என ஒதுக்கித் தள்ளாமல், "மந்தையில் உட்கார்ந்தால் என்ன?" என பாண்டியைத் துரத்தியடித்த மேல் சாதி வெறியர்களிடம் கேட்டார். இதனால் மேலும் ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள், ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்க, தாழ்த்தப்பட்டவர்களும் தங்களின் பாதுகாப்புக்காகத் திருப்பித் தாக்கினர். தீண்டாமையைக் கடைபிடித்த மேல்சாதி வெறியர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டிய போலீசோ, அதைச் செய்யாமல், இரண்டு தரப்பிலும் சிலரைக் கைது செய்துவிட்டு, நடுநிலை நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறது.

## "வாஜ்பாயும் 40 திருடர்களும்"

பிரதமர் வாஜ்பாயிக்குப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கென்றே ஒரு குழு இயங்கி வருகிறது. அந்தக் குழுவில் இடம் பிடித்துள்ள யோக்கிய சிகாமணிகளைப் போல உலகில் வேறெங்கும் தேட முடியாது. அக்குழுவைச் சேர்ந்த எஸ்ஸார் குழுமத்தின் முதலாளி சசி ருய்யா இந்தியத்தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு மட்டும் தர வேண்டிய கடன் பாக்கி 1,577.08 கோடி ரூபாய். பிர்லா நிறுவனங்களின் அதிபர் குமாரமங்கலம் பிர்லா செலுத்த வேண்டிய கடன் பாக்கி 212.27 கோடி ரூபாய். ஆர்.பி.ஜி. நிறுவனத்தின் அதிபர் சஞ்சீவ் கோயங்கோ 186.05 கோடி ரூபாயும், பி.பி.எல். முதலாளி ராஜிவ் சந்திர சேகர் 56 கோடி ரூபாயும் ஏப்பம் விட்டிருக்கிறார்கள். ஊர்ப் பணத்தைக் கொள்ளையடித்தவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுள்ள வாஜ்பாயி, வங்கியில் கடன் வாங்கி ஏப்பம் விட்டவர்களைத் தண்டிக்கச் சட்டம் கொண்டுவந்திருப்பதுதான் வேடிக்கையானது!


## குடிநீரா? கழிவுநீரா?

உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் குடிமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தூய்மையைப் பரிசோதித்த ஐ.நா. நிறுவனமொன்று, இந்தியாவின் தலையில் பலமான குட்டு வைத்துவிட்டது. 122 நாடுகளில் வழங்கப்படும் குடிநீரின் தரத்தைப் பரிசோதித்த அந்நிறுவனம், தரப்பட்டியலில் இந்தியக் குடிநீருக்கு 120 ஆவது இடத்தைத்தான் தந்திருக்கிறது. சுத்தமான, சுகாதாரமிக்க குடிநீர் வழங்குவதில் கடைசி இடத்தில் இருக்கும் இந்தியா, "வல்லரசு கனவு" காண்பதிலோ முதலிடத்தில் இருக்கிறது! ❑

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



'அம்மா' முன் கூழைக் கும்பிடு போட்டு நிற்காமல், 'அம்மா'வின் கையைப் பிடித்துக் குலுக்குவதில் இருந்தே இந்தப் படத்தில் இருக்கும் நபர் 'முக்கிய புள்ளி' என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். அவர், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தேசங்கடந்த நிறுவனமான வோல்ஸ்வேகனின் இந்தியக் கிளையின் தலைவர் ஹெப்முத் சுஸ்டர். வோல்ஸ்வேகன் இந்தியாவில் தொடங்கத் திட்டமிட்டுள்ள கார் தொழிற்சாலையை, தமிழகத்தில் வளைத்துப் போடுவதற்காக ஜெயாவே வலியப்போய் நடத்திய சந்திப்பு இது.

''முக்கிய சந்திப்பு'' என்று பத்திரிகைகளில் செய்தி வருவதைப் படித்திருப்பீர்கள். ஆனால் ஜெயா, சுஸ்டருடன் நடத்திய சந்திப்போ ''விலை மதிப்பு மிக்க'' சந்திப்பு. இராசஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த சுஸ்டரை, தனி விமானத்தில் சென்னைக்கு அழைத்து வந்து, ''கார் தொழிற்சாலையை இங்கே அமையுங்கள்; வேண்டுமானால், தமிழகத்தைக் கூட உங்களுக்கு பட்டா போட்டுத் தருகிறோம்'' எனுமளவுக்கு வாக்குறுதியை சுஸ்டருக்கு வழங்கி விட்டு, மீண்டும் அவரை விமானத்தில் ஏற்றி இராசஸ்தானுக்கு அனுப்பி வைத்தார், ஜெயா. தங்கத் தாம்பாளத்தில் வைத்து வரவேற்றார்கள் என்று கூறுவார்களே, அந்த முதுமொழி எல்லாம் இந்தச் சந்திப்பின் முன் சல்லிக்காசு கூடப் பெறாது. ஏனென்றால், இந்த அரைமணி நேரச் சந்திப்புக்கு ஆன செலவு மட்டும் ஒரு கோடியே நாற்பது இலட்ச ரூபாயாம்!

வோல்ஸ்வேகன் கார் தொழிற்சாலை தமிழகத்திற்கு வந்துவிட்டால், பட்டினியோடு போராடும் தமிழக விவசாயிகளின், நெசவாளிகளின் வயிறு நிறைந்துவிடுமா, என்ன? இன்று தமிழகத்தின் பிரச்சினை, எப்படியாவது வோல்ஸ்வேகன் கார் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதா? இல்லை, காவிரியில் தண்ணீர் வர வேண்டும் என்பதா?

இதோ, இந்தப் படத்தில் சாலையில் அமர்ந்து மறியல் செய்பவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள். ஒரு டன் கரும்பிற்கான விலையை ரூ.1,000/- என நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து, சென்னையில் கோட்டையை நோக்கி ஊர்வலம் நடத்தப் போவதாக இவர்கள் அறிவித்தார்கள். உடனே, ஊர்வலத்திற்குத் தடை விதிக்கப்பட்டது. தடையை மீறி இவர்கள் ஊர்வலம் செல்ல முயன்ற பொழுது, அவ்விவசாயிகளைக் கைது செய்து, உள்ளே தள்ளிவிட்டது தமிழக அரசு.



ஒரு டன் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும் என்பதொன்றும், ஆட்சியாளர்களை அச்சுறுத்தக்கூடிய பயங்கரவாதக் கோரிக்கையல்ல. அதுவொரு சாதாரண பொருளாதாரக் கோரிக்கை. கடந்த சட்டசபைத் தேர்தலின் பொழுது, ஜெயாவும் தனது தேர்தல் அறிக்கையில், கரும்பு விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியிருந்தும், கரும்பு விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுவை வாங்கிக் கொள்ளக் கூட எந்தவொரு அரசாங்க நாயும் முன்வரவில்லை; ஓட்டு வாங்கிய நன்றிகூட இல்லாமல், அவர்களைக் கைது செய்து உள்ளே தள்ளினார், பாசிச ஜெயா.

கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தர முன் வராத ஜெயா, தமிழகக் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஆதரவு விலையையும் (மைய அரசு ஒரு டன் கரும்புக்கு நிர்ணயித்த விலையோடு சேர்த்து தரப்பட்டு வந்த ரூ.188) தர மறுத்து விட்டார். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய கோடிக் கணக்கான ரூபாய் பாக்கியைத் தராமல் இழுத்தடிக்கும் அதே சமயம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் தனியாருக்கு விற்கவும் முடிவெடுத்து விட்டார். குப்புறத் தள்ளிய குதிரை குழியும் பறித்த கதைதான் இது.

அந்நிய நிறுவனங்களுக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு; உள்ளூர் விவசாயிகள் மீது அடக்குமுறை; கைது. தாராள சலுகைகளும், வசதிகளும் அந்நிய நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்படும் அதே சமயம், தமிழக விவசாயிகள் போராடிப் பெற்ற உரிமைகளும் சலுகைகளும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. ''ஓட்டுப் போட மக்கள்; உத்தரவு போட உலக வங்கி'' என ஆட்சி நடத்தும் இந்தப் பச்சைத் துரோகிகளை இனியுமா நாம் விட்டு வைக்க வேண்டும்?